விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை (12.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ‘சிறையில் மரணமடைய நேரிட்டாலும் எவர் முன்னாலும் மண்டியிட மாட்டேன்’

## பொன்சேகா வீராப்பு!



(கொழும்பு)

‘எனக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டாலும் சரி அல்லது சிறையிலேயே மரணமடைய நேரிட்டாலும் சரி நான் எவருக்கு முன்னாலும் மண்டியிடப்போவதில்லை’ என முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறினார். கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பகுதியிலுள்ள காவலரண்களை அகற்ற ஒரு மாதகால அவகாசம்!

(யாழ்ப்பாணம்)

ஒரு மாத காலத்துக்குள் யாழ்.நகர இராணுவ முகாம்கள் அகற்றப்படும் என யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க உறுதியளித்துள் ளார்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரிலுள்ள படை முகாம்கள் ஒரு மாத காலத்துக்குள் அகற்றப்படும் என யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க உறுதியளித்துள்ளார்.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றுவதிலும் அவர் அக்கறையாகவுள்ளார்.

எனினும் அப்பிரதேசங்களில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்படாமையினாலேயே மீள்குடியேற்றம் தாமதமாகின்றது. இவ்வாறு யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (ச-5)

## 10ஆயிரம் பேர் இணைந்து கொழும்பில் பேரணி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலையைக் கோரி சுமார் 10 ஆயிரம் பேர் வரையானோர் நேற்று கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையை நோக்கி பேரணியாகப் புறப்பட்டுச் சென்றனர்.

ஜனநாயக முன்னணியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது. பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா.ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் கலந்து (18ஆம் பக்கம் பார்க்க)

## சண்டே லீடர் ஆசிரியர் மீதான குறுக்குவிசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

போரின் போது வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய வந்த புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என கூறியமைக்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு நேற்று மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின் போது வெள்ளைக் கொடி தொடர்பான செய்தியை வெளியிட்ட சண்டே லீடரின் ஆசிரியர் ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் சாட்சியமளித்தார்.

2009ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி அன்று வெள்ளைக்கொடி தொடர்பான விபரங்களை பிரதிவாதியான சரத் பொன்சேகா விடமிருந்து அறிந்துகொண்டதாகவும் பின் னர் அடுத்தநாள் 2009 டிசம்பர் 14ஆம் திகதி மேலதிக விபரங்களை சரத் (18ஆம் பக்கம் பார்க்க)





10ஆயிரம் பேர் இணைந்த பேரணியில்...

## மீன் பிடித்தலுக்காக சகல தடைகளும் நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் மீன் பிடித்தல் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த சகல தடைகளும் த்ளர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் மீன் பிடித்தலுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

நிலக்கண்ணி வெடி அகற்றப்படாத சில பிரதேசங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய சகல பிரதேசங் (18ஆம் பக்கம் பார்க்க)

## வயாவிளான் ம.வியின் கல்விச் செயற்பாடு சொந்த இடத்தில் நேற்று ஆரம்பமாகியது

(கொழும்பு)

வயாவிளான் மகாவித்தியாலயம் நேற்று சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது நேற்றுக் காலை 9 மணிக்கு இதன் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மகிந்த கத்துருசிங்க கலந்து கொண்டு கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை கடந்தமாத இறுதியில் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்ட போதும் கட்டங்கள் எவையும் அற்ற நிலையில் பாடசாலையை அங்கு தொடர்ந்து இயக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந் நிலையில் தற்போது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் கட்டங்கள் ஓரளவு புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்று சொந்த இடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தரம் 10 இற்கு (18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கொழும்பில் வரும் ஞாயிறன்று கூடுகிறது

(கொழும்பு)

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடுகிறது.

இதற்கான அழைப்பாணையை கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா சகல மத்திய குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் எதிர்கால அரசியல் வேலைத்திட்டங்கள், கட்சியின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கை குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கை வரைபடம் மீள வடிவமைக்கப்படும்!

(கொழும்பு)

இலங்கையின் வரைபடம் மீள வடிவமைக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் நிலப்பரப்புக்களை மீள வடிவமைக்கும் பணிகளை நில அளவைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் நிலப்பரப்புக்கள் வான் வழியாகப் படம் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

செய்ம்மதி தொழில்நுட்பத்தின் ஊடாகப் படங்கள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய அபிவிருத்தித் திட்டங்களினால் இலங்கையின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ச-5)

# சுமார் 20 வருடங்களின் பின் நேற்று மண்டைதீவில் நெற்செய்கை ஆரம்பம்



மண்டைதீவில் சுமார் 20 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் நெற்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளினாலும் உயர் பாது காப்பு வலயப் பகுதிகளில் பெருமளவான வயல் நிலங்கள் இருந்ததனாலும் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது வயல் நிலங்கள் விவசாயிகளி டம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் கிராஞ்சிக்குளம் பகுதியில் சுமார் 600 பரப்பளவைக் கொண்ட வயலில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெற்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை யு.என்.எச். சி.ஆர். நிறுவனம் வழங்கியதுடன் யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களம் 20 பரப்புக்கு 60 கிலோ விதை நெல் வீதமும் வேலணை கமநல சேவைகள் திணைக்களம் உர மானியங்களையும் வழங்கியுள்ளன.

இதனையடுத்து 39 விவசாயிகள் நெற் செய்கையை நேற்று ஆரமபித்துள்ளனர். இதேவேளை அடுத்த வருடம் முதல் மண்டைதீவு பிரதான வீதிக்கு அருகேயுள்ள 200 பரப்பு நிலப்பரப்பில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மண்டைதீவு விவசாய சம்மேளனத் தலைவர் சபாநாயகம் வலம்புரிக்குத் தெரிவித்தார். (ச)

# லொறி-சைக்கிள் பண்ணை வீதியில் விபத்து போக்குவரத்து அரை மணிநேரம் ஸ்தம்பிதம்



(யாழ்ப்பாணம்)

லொறியும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதால் பண்ணை வீதியூடான போக்குவரத்து நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து சுமார் அரை மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தது.

குறிகாட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றின் பின் சில்லுக்குள் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சைக்கிள் ஒன்று சிக்கிக் கொண்டது.

இதனால் சைக்கிள் சில்லு பலத்த சேதமடைந்தது. இதனையடுத்து அப் பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அவ் வீதியூடான போக்குவரத்து சுமார்அரை மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

இந் நிலையில் தீவுப் பகுதிக்குச் சென்ற அரச ஊழியர்கள் தாமதமாகவே கடமைக்குச் சென்றதாகக் கூறப்பட்டது. எனினும் பொலிஸாரின் தலையீட்டையடுத்துப் போக்குவரத்துச் சீரடைந்தது.

இதேவேளை பண்ணை வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதாலேயே விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முல்லைக் கடலுக்குள் நுழையும் றோலர்களால் தொழில் பாதிப்பு

## மீனவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்பரப்புக்குள் யாழ்ப்பாணக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் றோலர் இழுவைப் படகுகள் நுழைவதாக முல்லைத்தீவு மீனவர்களால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு கடற்றொழில் மற்றும் நீரியல் வள உதவிப் பணிப்பாளரிடம் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

இது தொடர்பான ஆராயும் விசேட கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், முல்லைத்தீவு அரச அதிபர் எஸ்.வேதநாயகம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், யாழ்.மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவுக் கடற்பரப்பிற்குள் யாழ்ப்பாணக் கடற்பரப்பிலிருந்து கடற்றொழிலுக்குத் தடை செய்யப்பட்ட றோலர் இழுவைப் படகுகள் நுழைகின்றன.

அத்துடன் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் பயன்படுத்தப்படுவதாக முல்லைத்தீவு மீனவ சமூகத்தினரால் யாழ். அரச அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார்.

### இந்திய மீனவர்கள் அத்துமீறல்

அத்துடன் காங்கேசன்துறை, காரைநகர் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதாகவும் யாழ்.மீனவ சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை விட வடமராட்சிக் கடற்பரப்பிலிருந்து பள்ளப்பாடு கடற் பகுதி வரை மூன்று றோலர் படகுகள் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் மயிலிட்டிக் கடற்பரப்பிலும் இவ்வாறு இடம்பெறுவதாகவும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-5)


பண்டத்தரிப்பு
புனித பற்றிமா அன்னைத் திருத்தல திருக்காட்சி பெருவிழா

திருக்காட்சிப் பெருவிழா 13.10.2010 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு பெருவிழா திருப்பலி இடம்பெறும்.மாலை 4.30 மணிக்கு திருப்பலி இடம்பெறும்.

(C-1399) -பரிபாலகர்

செல்லா சினிமா



மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்
மூன்று ரிக்கெற் வாங்கினால் ஒரு ரிக்கெற் இலவசம்
இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு
வந்தே மாதரம்
அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்
D.இமான் ஹென்றி அரவிந்த்.T.
பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777
(சி/1384)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கருணாகரன் - சுதர்சினி தம்பதியினரின்
செல்வப் புதல்வன்
க.பிரவின்



(மு/விக்னேஸ்வரா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு)
2010-தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 6 ஆம் இடத்தினைப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, பிஞ்சு வயதுச் சாதனை உயர் கல்வி வரைத் தொடர இறையாசி வேண்டி நிற்கும்

வேம்படி, உடுத்துறை. இளையதம்பி குடும்பத்தினர்
(2662)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 1957.09.12 விண்ணில் 2010.09.01
நமசிவாயம் சிவகுமார்

எம்மையெல்லாம் மற்றவர் புகழ ஆளாக்கி
எல்லோர்க்கும் முன்னுதாரணமாய்
தரணியிலே புகழ் பெற வைத்த எங்கள் அப்பாவே!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு விட்டு
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொள்ளும்-எம்
அன்புத் தெய்வமே! மீண்டும் எங்களுடன் வருவீர்களா என
ஏங்கித் தவிக்கிறோம் உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 12.10.2010 இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 14.10.2010 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உயரப்புலம் ஆனைக்கோட்டை
மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளை.
(2665)

அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள உழவு இயந்திரங்கள், லான்ட் மாஸ்ரர்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்து கலந்துரையாட இருப்பதால் இன்று செவ்வாய்க் கிழமை(12.10.2010) பி.ப.12 மணிக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். தலைமைக் காரியாலயத்தில் (ஸ்ரீதர் தியேட்டர்) ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

உழவு இயந்திர உரிமையாளர்கள்.
(2647)

# இன்று ஒரு தகவல்

## கர்வம் நீங்கிய கதை

"என்னை விட்டால் வேறுயாரும் இந்தக் காரியத்தை செய்து விடமுடியாது'' என்று சொல்லி கொலரைத் தூக்கி விட்டுக் கொள் பவர்கள் பலர் உண்டு.

கர்வம் என்பது எப்படியோ வந்து, நம்மிடம் புகுந்து கொள்ளும். அதைக் கீழே இறக்கி வைப்பது மிகவும் கஷ்டமான காரியம். ஆஞ்சநேயரையே இந்தக் கர்வம் விட்டு வைக்கவில்லையாம்.

ஆனந்த இராமாயணம் சொல்கிறது.

அவர் சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக போனார் அல்லவா! அசோக வனத்தில் சீதையைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு கர்வம் உண்டாகியது. தான் செய்திருக்கும் செயல்களையெல்லாம் நினைத்துப் பார்த்தார்.

'அடா!' எப்பேற்பட்ட காரியமெல்லாம் நான் செய்திருக்கிறேன். சமுத்திரத்தையே தாண்டினேன். சீதாப்பிராட்டியைக் கண்டு பிடித்தேன். இராவணனையை கண்டு பேசினேன். அங்கே நெருப்பு வைத்து அரக்கர்களையெல்லாம் கதிகலங்கடித்தேன்'' இப்படியெல்லாம் தன்னைப்பற்றி பெருமையாக நினைத்தார் ஆஞ்சநேயர். உடனே அவருடைய உள்ளத்தில் கர்வம் உண்டானது. இதை பகவான் புரிந்து கொண்டார்.

ஆனால் ஆஞ்சநேயர் மிகவும் பெருமையாக சிரித்துக் கொண்டே கர்ஜனையுடன் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் அவருக்குத் தாகம் எடுத்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அவர் நின்று கொண்டிருந்த இடம் மகேந்திரமலை. சுற்றிலும் பார்த்தார். தண்ணீர் இருக்குமிடம் ஒன்றும் தென்படவில்லை. சிறிது தூரத்தில் ஒரு முனிவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. மிகவும் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

ஆஞ்சநேயர் அவரிடம் போய், ''முனிவரே! நான் இராமபிரானுக்காக சீதையைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். மிகவும் தாகமாக இருக்கிறது. தண்ணீர் இருந்தால் கொடுங்கள். இல்லையென்றால் அது இருக்குமிடத்தைக் காட்டுங்கள். நான் போய் குடிக்கிறேன் என்றார்.

முனிவர் தண்ணீர் இருக்கும் திசையைக் காட்டினார். ஆஞ்சநேயர் அங்கு புறப்பட்டார். போவதற்கு முன் சீதை அவரிடம் கொடுத்த சூடாமணி, மோதிரம், பிரம்மதேவன் கொடுத்த ஒரு கடிதம்- இம் மூன்றையும் முனிவருக்கு முன் வைத்து விட்டுத் தண்ணீர் குடிப்பதற்குப் போனார்.

சிறிது நேரத்தில் இன்னொரு குரங்கு அந்தப் பக்கமாக வந்தது. முனிவருக்கு முன்னால் இருந்த சூடாமணி, மோதிரம், கடிதம் எல்லாவற்றையும் எடுத்தது. முனிவருக்குப் பக்கத்திலிருந்த கமண்டலத்துக்குள் போட்டு விட்டுப் போய்விட்டது. முனிவர் அதையும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

ஆஞ்சநேயர் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பி வந்தார். முனிவருக்கு முன்வைத்துவிட்டுப் போன எதுவும் அங்கில்லை. பயந்து முனிவரிடம் கேட்டார். அவர் கமண்டலமிருக்கும் பக்கம் கண்ணைக் காட்டினார்.

இவர் உடனே ஓடிப்போய் அதற்குள் எட்டிப் பார்த்தார். உள்ளே பார்த்தால் இவருக்கு ஒரே ஆச்சரியம்! இவர் வைத்து விட்டுப் போனது போன்று ஆயிரக்கணக்கான முத்திரை மோதிரங்கள் கமண்டலத்துக்குள் கிடந்தன. அனுமார் குழம்பிப் போய்விட்டார். முனிவரைப் பார்த்தார்.

"சுவாமி,இவ்வளவு கிடக்கிறதே. இதில் நான் விட்டுட்டுப் போன மோதிரம் எது?'' என்று கேட்டார்.

முனிவர் மிகவும் நிதானமாக- அலட்டிக் கொள்ளாமல் இதற்குப் பதில் சொன்னார்:

"குழந்தாய்! இராமாவதாரம் நடக்கும் காலங்களில் எல்லாம் சீதையை இராவணன் கவர்ந்து செல்வதும் அதன்பின் அனுமார் சீதையைக் கண்டு திரும்பும் போது முத்திரை மோதிரத்தை என் கமண்டலத்துக்குள் போடுவதும் வழக்கம். அப்படிப் போடப்பட்ட மோதிரங்களைத் தான் இப்பொழுது நீ இந்தக் கமண்டலத்துக்குள் பார்க்கிறாய்'' என்றார். இதைக் கேட்டவுடன் ஆஞ்சநேயருக்கு இருந்த கர்வம் விலகியது. வெட்கத்துடன் முனிவரைப் பார்த்தார்.

''சுவாமி, அப்படியானால் இதுவரைக்கும் எத்தனை இராமர்கள் தோன்றியிருக்கிறார்கள்? என்று கேட்டார்.

''கமண்டலத்திலுள்ள மோதிரம் எத்தனை என்று கணக்குப் போடுவது முடியாத காரியம்'' என்றார் முனிவர். ஆஞ்சநேயர் யோசித்தார்:

"என்னைப் போன்று எத்தனையோ பேர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களை விட அப்படி என்ன நான் பெரிதாகச் செய்து விட்டேன்'' என்று நினைத்தார். அதன் பின் அங்கதன் இருக்குமிடத்துக்குப் போனார். அவனுடன் சேர்ந்து இராமபிரானிடம் போனார். வணங்கினார். கண் கலங்கி ஆச்சிரமத்தில் நடந்ததையெல்லாம் சொன்னார். எல்லாவற்றையும்கேட்டபின்னர் இராமபிரான்சிரித்துக்கொண்டே, "முனிவர் உருவத்தில் வந்து நான்தான் உன் நன்மைக்காக இந்த வேடிக்கையைச் செய்தேன். கவலைப்படாதே. இதோ பார்!'' என்றார்.

முனிவரின் ஆச்சிரமத்தில் விட்டுட்டு வந்த மோதிரம் இராமரின் கையில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஆஞ்சநேயர் தரையில் விழுந்து வணங்கினார். அதன் பின் எந்த நிலைமையிலும் அவருக்குக் கர்வம் வரவில்லையாம். இந்தக்கதை எதற்காக வென்றால், எந்தச் சமயத்திலும் மனதில் கர்வத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தவதற்காகத்தான். அனுமார் கர்வப்பட்டது போன்று நம் ஆள் ஒருத்தர் கர்வப்பட்டார்.

"அனுமார் அவ்வளவு கஷ்டப்பட்டு சீதை இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தார். நான் அதைவிட அதிகமாக கஷ்டப்பட்டு என்னுடைய மோதிரம் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தேன்'' என்றார். "எப்படி சேர்?'' என்றேன்.

''அடகுக் கடையில் அதைக் கண்டு பிடித்தேன் சேர். என் சம்சாரம் தான் அங்கே வைத்திருக்கிறார்.நான் இன்றைக்குத் தான் அதை மீட்டு வருகிறேன். இனிமேல் ஒரு மாதத்துக்கு எனக்கு கர்வமே வராது'' என்றார்." அது எப்படி?'' என்றேன்.

''இந்த மாதச் சம்பளம் முழுவதும் அங்கே கொடுத்து விட்டேனே! " அடகுக் கடையில் கொடுத்துத்தானே மீட்டிருக்கிறேன்.
கை

0யில் பணமில்லை. கர்வம் எப்படி வரும்?'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அமெரிக்க சிலோன் மிசன் திருச்சபையின் ஏற்பாட்டில் கட்டுரை, சித்திரப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினால் அமெரிக்கன் சிலோன் மிசன் தாய்ச் சங்கமாகிய பிற நாடுகளின் பணிக்கான அமெரிக்க ஆணைக்குழுவின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ''இலங்கையில் அமெரிக்கன் மிசன் அருட்பணியாளர்களின் பணியும் அதன் விளைவுகளும்'' என்ற தலைப்பில் போட்டிகள் நடாத் தப்படவுள்ளன.

இதில் கட்டுரைப் போட்டியானது 16 வயதிற்கு கீழ்ப்பட்டோருக்கு 500 சொற்களுக்குக் குறைவாக வும் 17 வயதில் இருந்து 35 வயது வரை உள்ளோருக்கு 1500 சொற்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுரைகள் யாவும் ஏ4 தாளில் தெளிவான முறையில் கையெழுத்தில் அல்லது தட்டச் சிட்டு அனுப்புதல் வேண்டும்.

சித்திரப்போட்டியானது 16 வயதிற்குக் கீழ்ப்பட்டோருக்கும் மற்றும் 17 வயதிலிருந்து 35 வயது வரை இடைப்பட்டோருக்கு நடாத்தப்படவுள்ளது.

சித்திரங்கள் யாவும் ஏ3 தாளில் தலைப்பினைப் பிரதிபலிக்கக் கூடியவாறு தீட்டப்படுதல் வேண்டும். விரும்பிய வர்ண வகைகளைப் பயன்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்கங்கள் யாவும் தலைமைச் செயலகம், அமெரிக்க சிலோன் மிஷன் திருச்சபை, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார் மடம், சுன்னாகம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு போட்டிக்கும் ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் தனித்தனியான பரிசுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)

# 20 ஆண்டுக்கு முன்பு உறைய வைத்த கருமுட்டை மூலம் குழந்தை பெற்ற பெண்

## மருத்துவ உலகில் சாதனை

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள விர்ஜீனியா மாகாணத்தைச் சேர்ந்த 42 வயது பெண் ஒருவர் குழ ந்தை இல்லாமல் மன வரு த்தத்தில் இருந்தார். இவர் கடந்த 10 ஆண்டுகளாக அவர் கிழக்கு விர்ஜினியா விலுள்ள கருத்தரிப்பு மைய த்தில் டாக்டர் செர்ஜியோ ஓக்னிஞ்சரிடம் சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது கருமுட்டையை டாக்டர் பரிசோதனை செய்த போது , அவரது கருமுட்டை குழந்தை பெற தகுதியில்லை என தெரிய வந்தது. இதை தொடர்ந்து வேறு ஒரு பெண்ணின் கரு முட்டை மூலம் அவர் குழந்தை பெற முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் அப்பெண் 20 வருடத்துக்கு முன்பு தனது கருமுட்டையை கரு வங்கியில் பத்திரப்படுத்தி வைத்திருப்பது நினைவுக்கு வந்தது. அது கெடாமல் உறைந்த நிலையில் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்தது. தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து தனது உறைந்த கரு முட்டையுடன் கணவரின் உயிரணுவை சேர்த்து குழந்தை பெற வைத்தனர். இது மருத்துவ உலகின் மிகப் பெரிய சாதனையாக கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

12.10.2010
(புரட்டாதி 26, செவ்வாய்க்கிழமை)
பஞ்சமி மாலை 6.09 மணிவரை
கேட்டை பின்னிரவு 3.53 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, நல்லதைச் செய்தும் குறை கேட்கும் வாய்ப்புண்டு, பிரயாணத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும்.

**இடபம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், பிரயாண நன்மையுண்டு, பிரிந்தவர் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** உற்சாகமாய் பணிபுரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தனவரவு தாராளமாக வந்து சேரும். பிரபலமானவர்களின் சந்திப்பால் பிரபலமடைவீர்கள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்.

**சிங்கம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் நாள், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகலாம்.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர் வழி உதவிகள் கிடைக்கும்.

**துலாம்** புதிய வாய்ப்புக்கள் வாயிற் கதவைத் தட்டும், பொது வாழ்வில் புகழ்கூடும், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வார்த்தையால் பிறரைக் கவர்வீர்கள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** உற்றார் உறவினர்களுக்காக ஒரு சிறு தொகையை கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** வியக்கும் செய்தி வீடு வந்து சேரும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருங்கால நலன்கருதி வங்கியிருப்பினை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர், வருமானம் திருப்தியாக அமையும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** மனக்குழப்பம் குறைந்து மகிழ்ச்சி கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகப்படும் நாள்.

வளவன்

# யா/மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று

தெல்லிப்பளை யா/மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளிய ரங்கில் கல்லூரி அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசய னன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களின் உருவச்சிலை திறந்து வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து மகாஜனன் நூற்றாண்டு மலர் வெளியிடப்படவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் பொன்னையா கன கசபாபதி கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். மலர் வெளியீட்டுரையை பிரதம விருந்தினர் நிகழ்த்தவுள்ளார். முதற்பிரதியை சின்னதம்பி ஸ்ரீலஜயன் (மகாஜனன்) பெற்றுக் கொள்வார்.

மலர் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவருமான கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் ஆற்ற ஏற்புரையை யா/மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் திருமதி ரேணுகாதேவி கேசவன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து மகாஜன மாதா குறும்பட வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 90-100 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 50 |
| தக்காளி | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 40 | 40 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 30 | 35 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 50-65 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 30 | 55 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 10-20 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 35-50 | 40 |



சகல அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் நேற்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய (க.பொ.த)உயர்தர பரீட்சை முடிவுகள்

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு கடந்த யூலை மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான , வர்த்தக பாட பரீட்சைப் பெறுபேறுகளை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ. வேதநாயம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் புள்ளிகள் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**க.பொ.த.உயர்தரம் 12**
**(2011 கணிதப் பிரிவு )**

எஸ்.செல்வநித்திலன் (யா/சென்.பற்றிஸ் கல்லூரி), கே.பிரதீப் (யா/நெல்லியடி ம.ம.வி), என்.பிரணவரூபம் (யாழ்.இந்துக் கல்லூரி), கி.தனிரோஜன் (யா/உடுப்பிட்டி அமெரிக் கன் மிசன் கல்லூரி), எஸ்.அரவிந் (யா/ஹாட்லிக் கல்லூரி), எல்.உமைப்பிரியை( யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), க.கமல வாசன் (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ), இ.கெசிகன் (யாழ். இந்துக் கல்லூரி ), எஸ். சுஜீவன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), வை. நிருஷன், எம்.கஜாகரன், ரி.ஜெனதன்(யாழ்.இந்துக் கல்லூரி), ஜெ.வியூகன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி ), எம்.யூடின் டெலோனா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். சிவராம் ( யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி ),எஸ்.சுதர்சன் ( யா/ஹாட்லிக் கல்லூரி),பி.மோசிதா ( யா/ வேம்படி மகளிர் கல்லூரி),எஸ்.வினோதினி, ஆர்.மெய் திரேகா, எஸ்.சேரலாதன், வி. ஆரணி (கொக் குவில் இந்துக் கல்லூரி),ரி.நிலாஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி. சயித்தா ( வேம்படி மகளிர் கல்லூரி), பி.நர்த்தனன், சி.அமல்நாஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.பவீனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ), கே.சுஜீவன், கே.கஜேந்திரன்( ஹாட்லி கல்லூரி), சி.மாதுளன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), என்.கிரிதாஸ் (இடைக்காடு ம.வி).

**க.பொ.த.உயர் தரம் 12**
**(2011 உயிரியல் பிரிவு )**

என். வாகினி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.கோபிநாத் ( யாழ்.இந்துக் கல்லூரி), எ. சஞ்சயன் ( சென்.ஜோன்ஸ் கல்லூரி ),எஸ். வரோதயன்( யாழ்.இந்துக் கல்லூரி), எஸ். தர்மிகா (வேம்படி மகளிர் கல்லூரி), செ.சிந்துகன்(யாழ்.இந்துக் கல்லூரி), ரி.நிஷாந்தன் ( ஹாட்லி கல்லூரி ), த.கோகுலன்( யாழ். இந்துக் கல்லூரி),எ.நிஷான்(யா/சென்.பற்றிஸ் கல்லூரி), வி.உருத்திராஞ்சலி(வேம்படி மகளிர் கல்லூரி), த.நிரோஷன்( ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி), எ.சுபகா(வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். ஆன்லாவண்ஜா(இளவாலை மடம் ம.வி), வி.சிறிதேவி, பி. ஆரணி, எ.அபிராமி, ஆர்.ஏஞ்சல்றுக்சனா, ஆர். கஸ்தனி, ஆர். சாரதாதேவி( வேம்படி மகளிர் கல்லூரி),எஸ்.செந்தூரன் (ஹாட்லி கல்லூரி),இ. றஞ்சினி(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),வி. நிரரோஷின் ( சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ். தர்சிகா(வேம்படி மகளிர் கல்லூரி), மோ.கபில்ராஜ்(ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி), த.லக்ஸ்மன்( யாழ்.இந்துக் கல் லூரி), எஸ். தாரண்ஜா, ஜி.சிறிசனா( வேம்படி மகளிர் கல்லூரி),ரி.துவாரகன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),கே.ஜனிதா(வேம் படி மகளிர் கல்லூரி), எஸ்.சரிதா( யாழ்ப்பாணக் கல்லூரி

**க.பொ.த.உயர்தரம் 12**
**(2011 வர்த்தகப் பிரிவு)**

கே.தர்ஷிகா (யா/வல்வை மகளிர் கல்லூரி), ஆர். உதஜனா (யாழ்/ யாழ் இந்து மகளிர் கல்லூரி), கு.யூலி கெப்சியா (யா/ அரு ணோதயாக் கல்லூரி), பி. நிவேதிகா (யா/சிதம் பராக் கல்லூரி), ஆர். துவாரகா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), பி. வெலோசன் (யா/ யாழ். இந்துக் கல்லூரி), எ. சிவாஜினி (யா/ கனகர த்தினம் ம.ம.வி), ஆர். கனாதரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), கே. நிருபிகா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), பி.தயாளன் (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), என். அகல்யா, எஸ். லக்ஷனா (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஆர். வினோத் (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), மு.தனுஷா(யா/அருணோதயாக் கல்லூரி), கே.தனுஷா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். கோகிலா (யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), எஸ். பிருந்தா, (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஏ. சிலோஜினி, எஸ். தர்மிகா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), இ. புவிப்பிரபா (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ஆர். சாருகாசினி (யா/ சிதம் பராக் கல்லூரி), கே. சௌமிஜா (யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி), பி. உஷாந்தி (யா/ கனகரத்தினம் ம.ம.வி.), மு.பிரதீபன்( யா/ மீசாலை வீரசிங்கம்), எஸ். கிரிஜா (யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), எஸ். சர்மிளா (யா/ வல்வை மகளிர் கல்லூரி),ஆர். தர்ஷன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.விதுசன்(யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஜே. பானுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மு. வேணுகாணன் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி). (ஸ்ரீ)

# உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முக்கிய கூட்டம் இன்று

“உங்கள் பிரதேச அபிவிருத்திக்கு மாற்றத்திற்கான அணுகுமுறையின் கீழ் உதவவுள்ளோம் ” எனும் தலைப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி திட்டம் தொடர்பான முக்கிய கூட்டம் இன்று காலை 10 மணிக்கு வலிமேற்கு சுழிபுரம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் (ILDP) எனும் கருப்பொருளிலான அபிவிருத்திக்கு 16 உள்ளூராட்சி சபைகளில் மூன்று சபைகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி பணிக்கான திட்டம் நடைபெறுகின்றது. இம் மூன்று சபைகளில் வலிமேற்கு பிரதேச சபையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி திட்டம் மூலமான பணிகளை விரைந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென வலி மேற்கு பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுசரணையினை ஜிரிசற் நிறுவன உள்ளூராட்சி நிபுணர் பெற்றர் நவ்ராட் அவர்களும் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், ஆளுநர் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச செயலர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர்.

எனவே இக்கூட்டத்திற்கு வலிமேற்கு பிரதேச சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள்,ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள்,செயலாளர்கள்,பொது அமைப்புக்கள் நெல்சிப் கொத்தணி உறுப்பினர்கள் மற்றும் கிராமிய மட்ட உறுப்பினர்கள் ஆகியோரை தவறாது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கலந்துகொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

மேலும் மேற்படி கூட்டத்திற்கு பிரதம அதிதியாக ஜிரிஇசற் நிறுவன உள்ளூராட்சி நிபுணர் பெற்றர் நவ்ராட் மற்றும் சிறப்பு அதிதியாக சுன்னாகம் பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோசனா முருகநேசன் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

யாழ்.செய்திகள்

## செயலமர்வு இடமாற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இம்மாதம் 13, 14 மற்றும் 18 ஆம்திகதி தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கு நடைபெறவிருந்த உள்வாரி, வெளிவாரி, மதிப்பீட்டு செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இச் செயலமர்வு அதே தினங்களில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு மாற்றப்பட் பட்டுள்ளது என்றும் அழைக்கப்பட்ட அதிபர்களை தவறாது பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

## தமிழ்த்துறை தொடர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தொடர் கருத்தரங்கு நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்“யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்” எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கருத்துரை வழங்கவுள்ளார். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் வி.எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யாழ்.மாவட்ட ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கட்டட நிர்மாணவேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடனான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும்.

சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் மற்றும் அபிவிருத்திச் சங்கம் ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருப்பின் அதிபர் தவறாது கலந்துகொள்ளும்படி மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் வேதனம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஐப்பசி மாத வேதனப் பட்டியல் யாழ்.கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்கு வாபஸ் பெறப்பட்டது

(கொழும்பு)

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு ,துமிந்த சில்வா மற்றும் ஹன்சில் இஷார் ஆகியோருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுக்காலை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பாதிக்கப்பட்டவரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது கட்சிக்காரருக்கு இவ்வழக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவதாக தெரிவித்து இவ்வழக்கை வாபஸ் பெற்றுள்ளார். (ஸ்ரீ-2)

# சாரதியின்றி செலுத்தக்கூடிய கார்கள்; கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது

உலகின் முன்னணி இணைய நிறுவனங்களில் ஒன்றான கூகுள் நிறுவனம் சாரதியின்றி செலுத்தக் கூடிய கார்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய கூகுள் நிறுவனத்தின் கணனிப் பொறியியலாளர்களினால் இந்த புதிய ரக கார் அமெரிக்க வீதிகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த காரின் மேல் பகுதியில் விசேட ராடார் பொருத்தப்பட்ட கமராவொன்று இயங்குவதாகவும் லேசர் மற்றும் ராடார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வீதிகளில் சாரதியற்ற கார்கள் பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி சமிக்ஞைகள் மற்றும் ஏனைய வாகனங்களின் போக்குவரத்து தொடர்பில் துல்லியமாக அறிந்து குறித்த சாரதியற்ற கார் போக்குவரத்தில் ஈடுபடுவதாக கூகுள் நிறுவனத்தின் மென்பொருள் பொறியியலாளர் செபஸ்டியன் துருன் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்த முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இக்காரில் பயிற்றப்பட்ட சாரதியொருவரும் மென்பொருள் நிபுணர் ஒருவரும் பயணிப்பதாகவும் கலிபோர்னியா வீதிகளில் குறித்த கார் வெற்றிகரமாக பயணத்தை மேற்கொண்டுள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது. வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும் இந்த விசேட வகை கார்கள் பேருதவியாக அமையும் எனவும்· குறித்த சாரதியற்ற கார் இதுவரையில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் கிலோ மீற்றர் வரையில் வெற்றிகரமாக பயணம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்பிரான்ஸிஸ்கோ கோல்டன் பாலம், ஸ்லொப்பிங் ஸ்ட்ரீட், தாவு குளம் மற்றும் கூகுள் காரியாலயம் ஆகிய இடங்களுக்கு குறித்த கார் போக்குவரத்தை மேற்கொள்வதாகவும் பாதுகாப்பை முதனிலைப்படுத்தியே இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருவதாக கூகுள் நிறுவனம் குறிப்பிட் டுள்ளது.

வருடாந்தம் 1.2 மில்லி யன் மக்கள் வீதி விபத்துக் களினால் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளதாகவும் இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்கு புதிய வகை கார் உதவியாக அமையும் எனவும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மலேசியாவில் மரபணு நுளம்பின் மூலம் டெங்கை ஒழிக்க திட்டம்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் டெங்கு காய்ச்சல் பரவி பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டில் மட்டும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களில் 53 சதவீதம் பேர் இறந்துள்ளனர். எனவே டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் பெண் ஏடிஸ் நுளம்புகளை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை.

எனவே அந்நாட்டு விஞ்ஞானிகள் தீவிரவமாக ஆய்வு மேற்கொண்டனர். அதன்படி மரபணு மாற்றம் செய்யப்பட்ட ஆண் ஏடிஸ் நுளம்புகளை உருவாக்கினர். இவை பெண் ஏடிஸ் நுளம்புகளை உருவாக்கப்படும் புழுக்களை கொன்று அழித்தன.

இதைத் தொடர்ந்து மலேசியாவில் உள்ள 2 மாநிலங்களில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட ஆண் ஏடிஸ் நுளம்புகளை உலாவர விட்டனர். அங்கு தற்போது டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறைந்துள்ளது.

ஆகவே இதே போன்று நடவடிக்கையை மலேசியா முழுவதும் மேற்கொள்ள அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இந்த தகவலை மலேசியா சுகாதார துறை மந்திரி லியோ தியாங் லாய் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வட-கிழக்கில் செஞ்சிலுவை சங்கப்பணிகள் தொடரும்

## பிரதமரிடம் சங்கத் தலைவர் உறுதி

வடக்கிலும் கிழக்கிலும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைவர் போல்கெஸ்டெலா பிரதமர் தி.மு. ஜெயரத்தினவிடம் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் கடந்த 2009ஆம் ஆண்டு அறிக்கையை அவர் பிரதமரிடம் கையளித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இவர்களின் சந்திப்பு அண்மையில் பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்றது. (ஸ்ரீ-2)

# சிகிரியா சுவரோவியங்களில் பூசப்பட்ட இரசாயனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சிகிரியா சுவர் ஓவியங்களின் பாதுகாப்புக்காக பூசப்பட்ட இரசாயனங்கள் காலாவதியாகியமையே அதன் நிறம் மாற்றமடைவதற்கான காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த இரசாயனம் சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் சிகிரியா சுவர் ஓவியங்கள் மீது பூசப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

சிகிரியா சுவர் ஓவியங்களின் நிறம் மாற்றமடைகின்றமை தொடர்பாக நீண்ட காலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த ஆய்வுகளின்போது ஒழுங்கு செய்யப்பட்ட விடயங்கள் பற்றிய அறிக்கையை உள்நாட்டு நிபுணர்கள் குழு கலாசார அமைச்சர் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி ஆணையாளர் ஆகியோரிடம் சமர்ப்பித்துள்ளது.

இரசாயனம், விஞ்ஞானம் தொடர்பான நிபுணர்களும் சுவர் ஓவியங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்களும் இக்குழுவில் இடம்பெற்றிருந்ததாக தொல்பொருள் ஆராய்ச்சி ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சிகிரியா சுவர் ஓவியங்கள் மீது பூசப்பட்டுள்ள இரசாயனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தொல்பொருள் ஆராய்ச்சி ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க பாடசாலை மாணவனான அண்ணா சிலையடியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் நீலாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

இ. திலோத்தமன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துதோடு, பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
பெரியப்பா-சின்னராசா
பெரியம்மா - புனிதவதி
அண்ணாமார், அக்காமார்.

"சரஸ்வதி அகம்"
நவிண்டில்.

(2660)

கண்ணகி அம்மனின் பாராட்டுப் பெறும் மழலை



காந்தநேசன் பானுஜன்

எமது ஆலய அறநெறிப்பாடசாலை மாணவன் காந்தநேசன் பானுஜன் கடந்த (2010) புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று சித்திஅடைந்ததையிட்டு அவரை பாராட்டுவதுடன் இவர் இன்னும் பல உயர்வுகளையும் பெற வேண்டுமென கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரரை பிரார்த்திக்கின்றோம்.

"அன்னையின் அருள் மகத்தானது"

கண்ணகி அம்மன் ஆலயம்,
வட்டுக்கோட்டை.

ஆலய பரிபாலன சபையும்,
தொண்டர் சபையும்.

(சி-1397)

After A/L CSC-ASIAN

உயர்தர பரீட்சைகளின் பின்

இந்தியா இலங்கை பங்களதேஷில் 500 கிளைகள்
ISO 9001 : 2000 சர்வதேசதர அங்கீகாரம்

சிஎஸ்சி - ஏசியன் நடாத்திய மெகா புலமைப் பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணர்களின் பதிவுகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. குறிப்பிட்டளவு அனுமதிகளே உள்ளதால் விரைவாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

DiTEC Diploma in Information Technology
DiWD Diploma in Web Design & Development
DiSE Diploma in Software Engineering
DiTG Diploma in IT & Graphics

Duration : 5 Months

Mega

Mega Offer
- Tally Accounting
- Office Automation
- Computer Application
- PC Professional
- Digital Pre-Press / DTP
- Video Production
- Cartoon Animation
- Adv.JAVA Programming
- Hardware & Networking
- 2D & 3D Modeling
- Graphic Design
- Web Animation

100% Practicle Training Free Course Books Individual Care

ISO 9001 : 2000 Certified Institution

தகவல் தொழில்நுட்பத்துறையின் முதல்வனுடன் இணையுங்கள்

CSC-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY
## POST OF BURSAR

Applications are invited by me up to 11th November 2010 ,from suitably qualified persons for the post of BURSAR.

Applications should be on prescribed form issued by the University. Application forms and particular for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments (Non- Academic) of this University on a payment of Rs. 100 /- for each application form at the people's Bank, University of Jaffna Branch or at the shroff's counter of this University.Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order/ Postal Order to the value of Rs.100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs.5/- Stamped envelope of 23X10c.m in size.

The envelope containing duly filled application form must bear 'Post of Bursar' on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 11th November 2010

**QUALIFICATIONS:**

1.(a) Should possess a Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka or its equivalent.

AND

(b) Should possess at least six (06) years of experience in Accounting and / or Auditing in an executive capacity after acquiring the qualifications at 1 (a) above.

OR

2. A holder of the post of Deputy Accountant / Deputy Bursar / Deputy Internal Auditor who is confirmed in that post and possesses three (03) years of satisfactory service in that post with qualification at 1(a) above. At least one (01) year out of the above (03) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

OR

3. A holder of the post of Senior Assistant Accountant / Senior Asst. Bursar / Senior Assistant Internal Auditor who is confirmed in that post and possesses ten (10) years of experience in accounting and / or / auditing if an executive capacity and at least eight (08) years of satisfactory service in the post of Senior Assistant Accountant / Senior Assistant Bursar / Senior Assitant Internal Auditor with qualifica tion as at 1(a) above. Three (03) years of such experience should be after acquiring the qualification at 1(a) above.

OR

4. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and confirmed in that post with Masters Degree in Accountancy/Finance/Management from a recognized University/HEI and possesses the Intermediate qualification of the Institute of chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent with not less than twelve (12) Years of experience in accounting and / or auditing in an executive capacity after successfully completion of the above professional examination. At least ten (10) years of such experience should be in the post of Senior Assistant Accountant/ Senior Assistant Bursar/ Senior Assistant Internal Auditor or above of the Commission or of higher Educational Institution.

OR

5. A person holding a Degree from a recognized University/ HEI, who possesses a qualification of Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Techno logical Education (SLIATE) or its predecessor with not less than fourteen (14) years of experience in accounting and/or auditing in an executive capacity after obtaning the HNDA. At least eight (08) years of such experience should be in the post of Deputy Accountant /Deputy Bursar/Deputy Internal Auditor in the Commission/HEI and confirmed in that post.

OR

6. Employees who are eligible in terms of commission circular No: 927 of 19.07.2010 can also apply.

**Note**:
Accounting and / or Auditing experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a state or Reputed private sector organization.

**Method of Recruitment:** Selection by a structured interview

**Salary Scale:** Rs.45,905-2x800:12x850:4x900-61,305/- p.m.

**AGE:**
Not more than 45 Years. This age limit will not be applicable to those who are employed in the public sector organization.

**Sabbatical Leave entitlement**:
The holder of the post of Bursar will become eligible for one year paid sabbatical leave or two years no pay sabbatical leave on Completion of 07 years of service. the Bursar proceeding abroad on sabbatical leave to enrich his administrative capacity will be eligible to receive passage for himself / herself and his/ her spouse.

**STATUTORY BENEFITS**
1. allowances approved by the university Grants commission
2. membership in universities provident fund and pension scheme in the university system
3. Gratuity payment
4. Employment trust fund benefits
5. Free medical care.

Application form Goverment Deparment, state corporations and statutory Bodies should apply through their appointing authority. Advance copies of application may be sent in the first instance. However , no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete, illegible applications and received after the closing date will be rejected.

**Registrar,**
**University of Jaffna,**
**2010.10.11**

(C-1398)

## பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி சனசமூக நிலையத்தின் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான பொது அறிவுப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி சனிக் கிழமை காலை 10.30 மணிக்கு ஆனைக் கோட்டை யாழ்/ உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் பாடசாலைகளுக்கூடாகவும் மற்றும் மேற்படி சனசமூக நிலையத்தில் நேரடி யாகவோ விண்ணப்பிக்கலாமென கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி சனசமூக நிலையச் செய ல்ளாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கை மீனவர்கள் 10 பேர் நாளை விடுவிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

இந்திய கடல் எல்லையில் அத்துமீறி மீன் பிடித்த போது கைதுசெய்யப்பட்ட 10 இலங்கை மீனவர்கள் நாளை புதன்கிழமை நாடு திரும் பவுள்ளனர்.

இந்தத் தகவலை மீன்பிடி மற்றும் நீர் வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுடன் 10 படகுகளும் விடுவிக் கப் படவுள்ளதாக அமைச்சு தரப்பு பேச்சாளர் ஒரு வர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதமளவில் 6 மீன வர்கள் கைது செய்யப்பட்ட அதே வேளை ஏனைய நால்வர் இந்த வருடம் மார்ச் மாதமள வில் இந்தியப் பொலிசாரினால் கைது செய் யப்பட்டிருந்தனர்.

இதனிடையே மேலும் 46 இலங்கை மீனவர்கள் இந்திய பாதுகாப்பு தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித் துறை அமைச்சு பேச்சாளர் குறிப்பிட்டுள் ளார்.

இவர்களை பயன்படுத்திய 13 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் 29 மீன வர்களும் 9 படகுகளும் ஆந்திரா பிரதே சத்திலும் ஏனையோர் கேரளா, ஒரிசா மாநிலங்களிலும் அந்தமான் தீவுகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களை துரிதமாக விடுவித்து இலங் கைக்கு அழைத்து வருவது குறித்து இந்திய மத்திய அரசுடனும் தமிழ்நாடு அதிகாரிகளுட னும் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள விஷேட தேவை உடையோருக்கான பட்ட மேற் கல்வி டிப்ளோமா (P.G.D.S.E) கற்கை நெறிக்காக விண்ணப்பித்த ஆசிரிய , மாண வர்களுக்கான புதிய பதிவுகள் யாவும் நாளை யும் நாளை மறுதினமும் நடைபெறவுள் ளது.


இக்கற்கை நெறிக்காக விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் தவறாது பதிவுசெய்யுமாறு யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர் களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)



ஊர்காவற்றுறை தம்பாட்டிக் கிராமத்தில் SOND நிறுவனத்தின் அனுசரணையோடு பிரதேச செயலகம் ஊடாக டெங்கு விழிப்புணர்வுச் சிரமதானம் இடம்பெற்றது. இதில் தம்பாட்டிக் கிராமத்தில் உள்ள 450வீடுகளும் விசேட குழுக்கள் ஊடாக பார்வையிட்டு சிரமதானப் பணிகள் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக தம்பாட்டி கிராமசேவகர் டெங்கு விழிப்பு சிரமதானம் தொடர்பாக ம்க்களுடன் கலந்துரையாடுவதையும் SOND நிறுவனத் திட்டப் பணியாளர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் டெங்கு சிரமதான நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# வடக்கு- கிழக்கு கடற்பகுதியில் கடற்றொழில் தடைகள் நீக்கம்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு கடற்பகுதியில் விதிக்கப்பட்டிருந்த கடற்றொழில் தடைகள் யாவும் நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தாம் பாதுகாப்புச் செயலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ள இடங்களைத் தவிர ஏனைய கடற்பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடலாம். அத்துடன் 40 குதிரை வலுக் கொண்ட படகுகளையும் கடற்றொழிலுக்குப் பயன்படுத்தலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள 40 குதிரை வலுக்கொண்ட 141 படகுகளை கடற்றொழில் அமைச்சிடம் கையளிக்க பாதுகாப்பு அமைச்சு இணங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண்களின் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஜோர்தானிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் தொழில் புரியும் இலங்கைப் பணியாளர்கள் மேற்கொண்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

குறித்த தொழிற்சாலையின் உரிமையாளர்களுக்கும் இலங்கைப் பணியாளர்களுக்குமிடையே நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை அடுத்துப் பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஜோர்தானுக்கான இலங்கைத் தூதரகத்தின் முயற்சியால் இந்தப் பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

பணியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு கடமைபுரிந்த இலங்கையைச் சேர்ந்த முகாமையாளரைப் பணியிலிருந்து நீக்குவதற்கு நிறுவனத்தின் உரிமையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜோர்தானுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி ஹேமந்த விஜேரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை தமது கோரிக்கைகளுக்குத் தீர்ப்பைப் பெற்றுக்கொடுக்கத் தொழிற்சாலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை முதல் கடமைக்குச் சமுகமளிக்கத் தீர்மானித்துள்ளதாகப் பணியாளர்களின் பிரதிநிதி எஸ். ஏ. ரசிக்க நிலங்க கூறியுள்ளார்.

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய இலங்கை முகாமையாளரைப் பணி நீக்கம் செய்யுமாறு கோரி இரண்டு நாட்கள் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் காலை ஆடைத் தொழிற்சாலைக்கு முன்னால் ஊழியர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது அந்த நாட்டுப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருந்தனர். இதன்போது 20 பேர் காயமடைந்தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பாடசாலை மட்ட தொகை மதிப்பீட்டை கணனி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இவ் ஆண்டுக்கான பாடசாலை மட்டத்திலான தொகை மதிப்பீடுகளை சீர் செய்து கணனி மயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரப் பிரிவின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் முகம்மட் தையார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச மற்றும் அரசின் கீழுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர் ஆசிரியர் தொகை மற்றும் அவற்றுடன் கூடிய தகவல்கள் ஒவ்வொரு வருடமும் சேகரிக்கப்பட்டு அவை கணனி மயப்படுத்தப்பட்டு வருகின் றன.

இதனடிப்படையில் இவ்வாண்டுக்கான பாடசாலை மட்டத்திலான தொகை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு திரட்டப்பட்ட தகவல்களை கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், பாடசாலை மட்ட தொகை மதிப்பீடு தொடர்பான செயலமர்வுகள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான கிழக்கு மாகாணத்திற்கான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை திருகோணமலை யில் நடைபெறவுள்ளதுடன் வடமாகாணத் திற்கான செயலமர்வு எதிர் வரும்20 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறுமென அவர் குறிப்பிட்டார்.

இச் செயலமர்வுகளில் மாகாண வலய திட்ட பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் தரவுகளை ஒழுங்குபடுத்தும் கணனி இயக்குநர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதேவேளை, கடந்த 30 வருடங்களின் பின்னர் தேசிய மட்டத்தில் குடிசனத் தொகை மதிப்பீடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப் பணிகள் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. தேசிய மட்டத்திலான குடித்தொகை மதிப்பீடானது 1981 ஆம் ஆண்டு இறுதியாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் இரண்டாம் தவணை பதவிப்பிரமாண நிகழ்வு கொழும்பில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிப்பிரமாண நிகழ்வுகள் கொழும்பில் நடைபெறவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம்திகதி கொழும்பு காலிமுகத் திடலில் இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வுகள் நடத்தப்படும் என அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நிகழ்வுகளை அனுராதபுரத்தில் நடாத்துவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், முப்படையினரின் மரியாதை அணிவகுப்புக்கள் உள்ளிட்ட நிகழ்வுகளை நடாத்துவதற்கு அனுராதபுரம் உசிதமாகாதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வுகளை மிகவும் கோலாகலமான முறையில் நடாத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவிப் பிரமாண நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும்சகல பணிகளும் முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உலக சுற்றுலா உச்சிமாநாடு அடுத்த வருடம் கொழும்பில்

(கொழும்பு)

ஆசிய உலக சுற்றுலா உச்சி மாநாடு அடுத்தவருடம் கொழும்பில் இடம்பெற உள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த உச்சிமாநாடு அடுத்த வருடம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 36 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேபோல, ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவடைந்த இந்த வருட காலப்பகுதியினுள் 55 ஆயிரத்து 898 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை பதிவாகியுள்ளதாகவும்இந்த நிலையில் சுற்றுலாப் பயணத்துறையை மேலும் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய, அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பிரதேசங்களான பாசிக்குடா, குச்சவெளி, கற்பிட்டிய போன்ற இடங்களில் ஆயிரம் அறைகளைக் கொண்ட 13 சுற்றுலாப் பயணிகளுக்கான விருந்தகங்கங்கள் நிர்மாணிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர குச்சவெளி 500 ஏக்கர் மற்றும் கற்பிட்டிய சுற்றுலா வலய பிரதேசத்தினுள் 14 தீவுகளும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தற்போது முன் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நலம் தரும் நவராத்திரி



## நவராத்திரி 5ஆம் நாள்

### வளர்ச்சியை கூட்டும் வைஷ்ணவி வடிவம்



இருள் விலகி ஒளி ஏற்றுவதற்கு பெயர் 'தீபம்'. இதை இல்லத்தில் ஏற்றினால் விலகும் பாவம். ஆலயத்திற்கு சென்று ஏற்றினால் விலகும் சாபம். அந்த தீபத்தை ஏற்றி வழிபடுவன் மூலம் தெய்வாம்சத்தை நம் இல்லத்தில் குடி கொள்ள வைப்பவள் திருமகள். அந்த திருமகளை "வைஷ்ணவி" வடிவத்தில் நவராத்திரியின் 5 ஆம் நாள் அலங்கரித்து வழிபட வேண்டும்.


கொலு மண்டபத்தில் சில மாற்றங்களைச் செய்து காளி, துர்க்கை, அனுமன், நந்தி ஆகிய பொம்மைகளை அதிகம் இடம்பெறச் செய்ய வேண்டும். மகாலட்சுமியின் வடிவத்தை இன்று வைஷ்ணவியாக மாற்றும் பொழுது கழுத்தில் காய்கறி மாலை, பழமாலை, மாணிக்க மாலை, முத்துமாலை, நாகாபரணம் ஆகியவற்றை அணிவிக்க வேண்டும். "பந்துவராளி" ராகத்தில் பாடல்கள் பாடினால் எந்த நாளும் இனிய நாளாக மாறும்.

சிவல்புரி சிங்காரம்

# இந்தோனேசிய மெராக் துறைமுக அகதிகள் தடுத்து வைக்கப்பட்டு ஓராண்டு நிறைவு

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அன்று அவுஸ்திரேலியா நோக்கி சென்று அகதி தஞ்சம் கோரி சென்று கொண்டிருந்த 254 இலங்கை தமிழ் அகதிகள் இந்தோனேசிய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நேற்றுடன் ஓராண்டு நிறைவு பெறுகிறது.

கைது செய்யப்பட்ட இவர்கள் 6 மாத



காலமாக இந்தோனேசிய மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் அடிப்படை வசதிகள் மற்றும் போதிய மருத்துவ வசதிகள் மறுதலிக்கப்பட்டமையினால் ஜேக்கப் என்ற 30 வயது இளைஞன் உயிரிழந்த சம்பவமும் நிகழ்ந்தது.

இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் ஏப்ரல் 19ஆம் திகதி இந்தோனேசிய குடிவரவு , குடியகல்வு அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியாவுக்கான யு.என்.எச்.சி.ஆர் .வதிவிடப் பிரதிநிதி அடங்கலாக குழுவினரின் உறுதி மொழிக்கு அமைய தன்னிச்சையாக வெளியேறிச் சென்ற அகதிகள் தவிர்ந்தவர்கள் தஞ்சோங்பினாங் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமிற்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

மெராக் துறைமுகத்தில் இருந்தும் அவர்களைப் அப்புறப்படுத்தும் போது ஓகஸ்ட் 30ஆம் திகதியிலான தினத்திற்கு முன்னர் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு அகதி அந்தஸ்து வழங்கப்படும் என்று யு.என். எச்.சி.ஆர். அதிகாரி வழங்கிய உறுதி மொழியானது இன்னமும் நிறைவேற்றப் படவில்லை.மேலும் ஒரு வருட காலத்திற்குள் 3ஆம் நாடொன்றில் மீள் குடியேற்றம் செய்து வைக்கப்படும் என்று இந்தோனேசிய அரசு வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்றவாறான எந்த நடவடிக்கைகளும் இன்னமும் மேற் கொள்ளப்படவில்லை.

குழந்தைகள் , பெண்கள் உள்ளடங்கலாக 134 இலங்கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் சூனியமாக்கப்பட்டு சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் வாழ்க்கை நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவர்களை அன்றைய அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின்ரூட் அவர்களின் பணிப்பின் பேரிலேயே கைது செய்ததாகவும் இந்தோனேசிய அரசு எந்தவித தீர்வும் இன்றி இவர்களை •சிறையில் அடைத்து வைத்திருப்பது என்பது மிகப்பெரிய மனித உரிமை மீறல் என்றே கருதுகின்றனர்.

சர்வதேச சமூகமும் மேற்குலக நாடுகளும் இவ் அகதி மக்கள் சார்பாக நல்லதொரு முடிவினை இந்த ஒருவருட முடிவிலாவது வழங்கி உதவ வேண்டும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றார்கள். (ஸ்ரீ-2)

## பொதுநலவாய விளையாட்டுப்போட்டியை 2018 இல் இலங்கையில் நடத்த இந்தியா ஆதரவு

(கொழும்பு)

இந்தியாவின் தலைநகர் டில்லியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பொது நலவாய நாடுகளுக்கு இடையிலான சர்வதேச விளையாட்டுப்போட்டியின் நிறைவு விழாவுக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ளார்.

இந் நிறைவு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறுகின்றது. பொது நலவாய நாடுகளுக்கு இடையிலான சர்வதேச விளையாட்டுப்போட்டியை எதிர் வரும் 2018ஆம் ஆண்டு இலங்கையில் நடத்துவதற்கு இந்தியா தார்மீக ஆதரவு வழங்கும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இவ் அழைப்பு அமைந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(ஸ்ரீ-2)

# கடந்த காலப்பிரச்சினைகளுக்கான மூல காரணத்தை கண்டறியவே நல்லிணக்க ஆணைக்குழு நியமனம்

## அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த காலங்களில் இடம் பெற்ற பிரச்சினைக்கான மூல காரணம் என்ன என்பதை கண்டறிவே கற்றுக்கெண்ட பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இதன்மூலம் புதிய யோசனைகள் முன்வைக்கப்படும் என்பது எமது நம்பிக்கையாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவினால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுவரும் விடயங்கள் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, நாட்டில் கடந்த காலங்களில் இடம் பெற்ற பிரச்சினைக்கான மூல காரணம் என்ன என்பதை கண்டறியும் நோக்கிலேயே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒரு தேவை அரசாங்கத்துக்கு இல்லாவிடின் இந்த ஆணைக்குழுவை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை இவ்வாறு ஆணைக்குழுவை நியமித்து பிரச்சினைக்கான மூல காரணத்தை அறிய வேண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது.

மேலும் இந்த ஆணைக்குழுவில் அரசியல்வாதிகள் உள்ளிட்ட சமூக அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் சாட்சியமளிக்கின்றனர்.

இதன்மூலம் புதிய கருத்துக்கள் மற்றும் யோசனைகள் முன்வைக்கப்படும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் இவ்வாறானதொரு ஆணைக் குழுவை நியமிப்பதன் மூலம் புதிய யோசனைகளை பெற முடியுமிடத்து அவற்றை நாங்கள் பரிசீலிக்கலாம். கடந்த காலங்களில் பல அரசாங்கங்களினாலும் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களினால் பயன் கிடைக்காமல் போயிருக்கலாம்.

அதன் காரணமாக இந்த நல்லிணக்க ஆணைக்குழுவை பலர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கலாம். ஆனால் பிரச்சினைக்கான உண்மையான காரணத்தை கண்டறிய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனை செய்துள்ளார்.

எனவே இவ்விடயத்தில் நாம் எதிர்பார்ப்புடன் இருக்கவேண்டும். மேலும் தமிழ் எம்.பி. க்கள் தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது சிறந்ததாகும்.

அதற்கான தேசிய மட்ட செயற்பாடு களில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அர்த்தமில்லை.

மாறாக தமது பிரதேசங்களை அபி



விருத்தி செய்யும் செயற்பாடுகளில் தமிழ் எம்.பி.க்கள் எம்முடன் இணைந்து செயற்படலாம். அது தொடர்பான ஆரோக்கியமான நகர்வுகளை நாங்கள் தற்போது காண்கின்றோம். (ஸ்ரீ-2)

# மஹியங்கனையில் 300 சிறுமிகளுக்கு சட்டவிரோத திருமணம் என முறைப்பாடு

(கொழும்பு)

மஹியங்கனை பிரதேசத்தில் உள்ள ரிதீமாலியத்தை பகுதியைச் சேர்ந்த 300 சிறுமிகளுக்கு சட்டவிரோதமான முறையில் திருமணம் செய்து வைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசேட பொலிஸ் குழுவொன்றை குறித்த பிரதேசத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சிறுமிகளை திருமணம் செய்துகொண்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிறுவயதினருக்கு திருமணம் செய்து வைத்தாகக் கூறப்படும் பொலன்னறுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த விவாகப் பதிவாளர்கள் 20 பேர் ஜனாதிபதியின் அனுமதியின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இந்திய விளையாட்டு பல்கலைக்கழகத்தில் இலங்கை வீரவீராங்கனைகளுக்கு பயிற்சி

இந்தியாவிலுள்ள விளையாட்டுத் துறைக்கான பல்கலைக்கழகத்தில் இலங்கை வீர வீராங்கனைகளுக்கு பயிற்சியளிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்க இந்திய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் எம்.எஸ்.கில் ஆகியோருக்கிடையில் இரு தரப்பு பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டுத்துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுறவை வலுப்படுத்துவதற்கு தமது தூதுக்குழுவினருடன் இரு நாடுகளின் அமைச்சர்களும் பரஸ்பர விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

விளையாட்டுத்துறைக்கான உதவிகளை வழங்குமாறு சி.பி.ரத்நாயக்க கோரியுள்ள நிலையில் அதற்கான உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பொன்சேகாவை விடுவிக்கக் கோரி கட்டுகஸ்தோட்டையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கண்டி கட்டுகஸ்தோட்டை நகரில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கண்டி மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீம் மற்றும் கட்சியின் ஹரிஸ்பத்துவ கிளையினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு எம்.எச்.ஏ.ஹலீம் , மத்திய மாகாணசபை உறுப்பினர்களான அல்ஹாஜ் ஏம்.எஸ்.எம்.ஷாபி ,எஸ்.எம்.பீ.டி. அல்விஸ்,பூஜாப்பிட்டிய பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.எம்.சலீஸ் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டுமென்ற பல்வேறு விதமான பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த ஆர்ப்பாட்டத்தினால் கண்டி,மாத்தளை வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. (ஸ்ரீ-2)

# யுத்தத்தின் போது பெற்றோரால் தவறவிடப்பட்ட 639 பிள்ளைகள் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் போர்ச்சூழல் நிலவியபோது பெற்றோர்களால் தவறவிடப்பட்ட 639 பிள்ளைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களால் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிள்ளைகளைக் கண்டு பிடித்துப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையார் சரத் அபேகுணவர்தன கூறியுள்ளார்.

வடமாகாணச் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம் 13 பிள்ளைகள் கண்டு பிடிக்கப்பட்டுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தச் சூழலில் பெற்றோரால் தவறவிடப்பட்ட பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் இருக்கின்றார்களா என்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஏனைய மாகாணங்களில் உள்ள சிறுவர் பாதுகாப்புத் திணைக்களங்களின் ஒத்துழைப்பை வட மாகாண் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் கோரியுள்ளது.

இதற்கமைய இந்த மாதத்தின் நடுப்பகுதியில் இந்த விடயம் தொடர்பாக அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த சிறுவர் பாதுகாப்புச்சேவைகள் திணைக்கள ஆணையாளர்களை ஒன்றுகூட்டிப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வெற்றிடங்களுக்கு போட்டிப்பரீட்சை

இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் காணப்படும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வெற்றிடங்களை போட்டிப் பரீட்சை மூலம் நிரப்புவதற்கு வெளி விவகார அமைச்சு தீர்மானித் துள்ளது.

அரச முகாமைத்துவச் சேவை , அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ சேவையின் தரம் I அல்லது தரம் II ஐச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என வெளிவிவகார அமைச் சின் செயலாளரினால் இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டுமுறைகள், தாபான விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும், ஆங்கிலம் மற்றும் பொது அறிவு ஆகிய 4 பாடங்களை உள்ளடக்கியதாக இதற்கான போட்டிப்பரீட்சை,பரீட்சை ஆணையாளரினால் கொழும்பில் நடத்தப்படும். இதற்கான விண்ணப்ப முடிபுத் திகதி 2010.11.08 என அமைச்சின் செயலாளர் சீ.ஆ.ஜெயசிங்க அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# சரத்பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் அவருக்கே உரியது என ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் ஆசனத்தைப் பாதுகாப்பதற்கு ஜே.வி.பி.முழு முயற்சி மேற்கொள்ளும் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதனால் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற ஆசனம் இழக்கப்பட்டதென்பனை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து மேன்முறையீட்டு மனுவொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாப்பதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இரு வேறு மனுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு ஜே.வி.பி. முனைப்பு காட்டுவதாக சிலர் பிழையான செய்திகளை வெளியிட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய தேசிய புலனாய்வு பிரிவை உருவாக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் புதிய தேசிய புலனாய்வு பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற சட்ட மூலமொன்றின் ஊடாக நிலையானதும் தொழில்சார் தன்மையுடையதுமான புலனாய்வுப் பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்று சிவில் அடையாளங்களைக் கொண்டதாக புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்படும் எனவும் உள் மற்றும் வெளிப்பிரிவு புல னாய்வு சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது

புதிய புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேசியப் பாதுகாப்பை தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய புலனாய்வுப்பிரிவு உருவாக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பாலித கோஹணவின் கையொப்பத்தை மோசடி செய்த சிரேஷ்ட இராஜதந்திரி

சிரேஷ்ட இராஜதந்திரியொருவர் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹணவின் கையொப்பத்தை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரெஞ்சு மொழித் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் ஒன்றை மோசடி செய்த குற்றத்திற்காக குறித்த இராஜதந்திரிக்கு கட்டாய விடுமுறை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. போலியான சான்றிதழை உண்மையானதென நிருபிக்கும் நோக்கில் குறித்த இராஜ தந்திரி பாலித கோஹணவின் கையொப்பத்தைமோசடிசெய்துள்ளார்.

இதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் கையொப்பத்தை மோசடி செய்தமை குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இராஜதந்திரியின் வெற்றிடத்திற்கு தற்போது புதுடில்லியில் கடமையாற்றி வரும் சுகீஸ்வர குணரட்ன நியமிக்கப்படலாம் என வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.10
12

- கிமு 539 - பாரசீகத்தின் மகா சைரசின் இராணுவம் பாலிலோனைப் பிடித்தது.
- 1492 - கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடைந்தார். அவர் கிழக்காசியாவைத் தான் அடைந்ததாக எண்ணினார்.
- 1654 - நெதர்லாந்தில் டெல்ஃப்ட் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் அதிகாமானோர் கொல்லப் பட்டனர்.
- 1798 - இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக (King's Colony) அறிவிக்கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக ஆக்கப்பட்டார்.
- 1899 - தென்னாபிரிக்காவின் போவர் குடியரசு இங்கிலாந்து மீது போரை அறிவித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: கூட்டுப்படைகளை பெல்ஜியத்தில் இருந்து தப்ப உதவியமைக்காக பிரித்தானியத்தாதி எடித் கவெல் என்பவர் ஜெர்மனியர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1918 - மினெசோட்டாவில் கிளம்பிய காட்டுத்தீயினால் 453 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - உக்ரேனின் தினிபுரோபெத்ரோவ்ஸ்க் நகரில் இந்நாளிலும் இதற்கு அடுத்த நாளிலும் நாசி ஜெர்மனியினர் 11ஆயிரம் யூதர்களைக் கொன்றனர்.
- 1964 - சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.
- 1968 - எக்குவட்டோரியல் கினி ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - மறைந்த மா சே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமிப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.
- 1984 - ஐ.ஆர்.ஏ குண்டுவெடிப்பில் இருந்து மார்கரெட் தாட்சர் காயமெதுவும் அடையாமல் உயிர் தப்பினார்.
- 1986 - மன்னார் அடம்பனில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் முதன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இத் தாக்குதலில் புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் விக் டர் கொல்லப்பட்டார்.
- 1994 - மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனுடனான தொடர்புகளை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.
- 1999 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பெர்வேஸ் முஷாரஃப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் ஜனாதிபதியானார்.
- 1999 - உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.
- 2002 - பாலியில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 202 பேர் கொல்லப்பட்டு 300 பேர் காயமடைந்தனர்.
- 2003 - பெலாரசில் மனநோய் வைத்திய சாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 30 மனநோயாளர் இறந்தனர்.
- 2005 - சீனாவின இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6 இரண்டு விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.


## பிறப்புகள்

- 1891 - எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (இ. 1956)
- 1918 - கே.கே. பிர்லா, இந்தியாவின் தொழிலதிபர் (இ. 2008)
- 1935 - லூசியானோ பாவ்ராட்டி, இத்தாலியப் பாடகர் (இ. 2007)

## இறப்புகள்

- 1605 - பேரரசர் அக்பர், முகலாயப் பேரரசின் மன்னர் (பி. 1542)
- 1870 - ராபர்ட் ஈ. லீ. அமெரிக்க இராணுவத் தளபதியும் பொறியியலாளரும் (பி. 1807)
- 1924 - அனத்தோலி பிரான்ஸ், பிரெஞ்சு எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1844)
- 1965 - போல் ஹேர்மன் முல்லர், சுவிற்ஸர்லாந்து வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1899)
- 1999 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (பி. 1936)

**2001 - அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.**



# கனவுகளும், அதன் பலன்களும்...



கனவுகளின் பலன்கள் பற்றி, பல நூல்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. இதில், ஒவ்வொரு நூலுக்கும் இடையே பலன்கள் கூறுவதில் சிறு, சிறு வித்தியாசங்கள் தென்படுகின்றன.

இராமாயணத்தில் ,விபீஷணனின் பெண் திரிசடை கண்ட கனவைப் பற்றி விரிவாக சொல்லப்பட்டுள்ளது.

❖ ராஜா, பட்டத்து யானை, வெண்மையான குதிரை, பசு போன்றவற்றையும், வலிமை பொருந்திய எருதுவையும், சொக்கத் தங்கத்தையும் கனவில் கண்டால் நீண்ட நாள் பிரிந்து சென்ற உறவினரைப் பார்க்கும் வாய்ப்பு உண்டாகும். கடனில் உள்ளவர்களுக்கு பொருளாதார உயர்வு உண்டாகும். குழந்தை இல்லாதவர் களுக்கு புத்திரபாக்கியம் உண்டாகும் வாய்ப்பும் உண்டு.

❖ உயர்ந்த மலையையும், வலிமையான யானை, பலம் பொருந்திய எருது, உயர்ந்த மரம் - இவற்றின் மேல் ஒருவர் ஏறி அமர்வதாக கனவு கண்டாலும் அசுத்தங்கள் தன் மீது படுவது போல் கனவு கண்டாலும், இரத்தத்தை கனவில் கண்டாலும் எதிர்பாராத இலாபத்தை பெறலாம். நோய் உள்ளவர்கள் அந்தப் பாதிப்பில் இருந்து விடுபடுவார்கள். நீண்டகாலம் எதிர்பார்த்த ஒரு பொருள் கைகளுக்கு வந்து சேரும்.

❖ தவறான செயல்கள் புரிபவர்கள், கள்வர்கள் போன்றவர்கள் சண்டைக்கு வருவது போல் கனவு கண்டால் நோய் உண்டாகும்.

❖ தான் வசிக்கும் வீட்டை பசுஞ்சாணியால் தெளித்து, கோலமிட்டு அலங்கரிப்பது போல் கனவு கண்டால் பொருள் திருட்டு போக

## ஜோதிடக் களம்

வாய்ப்பு உண்டாகும்.

❖ பூக்கள் பூத்த, வாசனை வீசக்கூடிய மரத்தின் மீது ஏறிநிற்பது போல் கனவு கண்டால் நீண்ட நாட்கள் எதிர்பார்த்த ஒரு விடயம் வெற்றிகரமாக முடியும்.

❖ ராஜநாகம் வலது தோளில் இருப்பது போல் கனவு கண்டால் தங்கத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும்.

❖ உயர்ந்த கோட்டை சுவற்றின் மேல் அமர்ந்து உணவு உண்பதுபோல கனவு கண்டாலும், கடலைத் தாண்டி செல்வது போல் கனவு கண்டாலும் உத்தியோகத்தில் உயர்ந்த பதவி உண்டாகும்.

❖ விஷ ஜந்துக்களை கனவில் கண்டால் நினைத்தகாரியம் வெற்றிகரமாக முடியும்.

❖ தாமரை இலையில் பால் பாயசம் சாப்பிடுவது போல் கனவு கண்டால், மக்களால் மதிக்கக் கூடிய உயர்ந்த நிலையை அடையலாம்.

❖ பலவிதமான பறவைகளை வலைவீசி பிடிப்பதுபோல கனவு கண்டால், நிறையப் பொருளை அடையக்கூடிய வாய்ப்பைப் பெறலாம்.

❖ சோம பானம் போன்றவற்றை தங்க பாத்திரத்தில் உண்பதுபோல் கனவு கண்டால் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டாகும்.

❖ நன்கு ஜொலிக்கக் கூடிய தீபம், அன்னப் பறவை, வெண்மையான குடை, சாமரம் போன்றவை கனவில் வந்தால் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும்.

❖ கழுதை, ஒட்டகம், கிடா போன்றவற்றில் ஏறி தெற்கு நோக்கிச் செல்வது போல் கனவு கண்டால் மரண பயம் உண்டாகும்.

❖ வெற்றிலை, வாசனைப் பாக்கு, சுண்ணாம்பு ஆகியவை ஒரு தட்டில் இருப்பது போல் கனவு காண்பதும், சந்தனம், தயிர் போன்றவற்றை கனவில் காண்பதும் பொருளாதார இலாபத்தை உண்டு பண்ணும்.

❖ பொதுவாக, பகலில் காணும் கனவுகளுக்கு பலன் இல்லை என்றும், பின்னிரவில் காணும் கனவை விட, முன்னிரவில் காணும் கனவிற்கு உடனடி பலன் உண்டு என்றும் கூறுகிறார்கள்.

❖ தீய கனவு கண்டால் உடனே எழுந்து ராம நாமத்தை சொல்லி, அதன் பின்னர் உறங்குவது தீய பலன்களை விலக்கும்.



உளநல மேம்பாட்டு தினத்தை முன்னிட்டு மனங்களைப் பாதுகாத்து மாண்புற வாழ்வோம் என்ற தொனிப்பொருளில் மானசசஞ்சாரம் - 2010 என்ற நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பொதுநூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணரும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்டவிரிவுரையாளருமான வைத்திய கலாநிதி ரி.குமணன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# யுத்தத்தினால் சேதமடைந்துள்ள பாடசாலைகள் திருத்தியமைக்கப்படாமையால் மாணவர்கள் சிரமம்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் யுத்தம் காரணமாக பாதிப்படைந்த பாடசாலைகள் மீளத் திருத்தியமைக்கபடாமையினால் மாணவர்கள் மரத்தடியில் இருந்து கல்விகற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரத்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பாடசாலைகளை மீளத் திருத்தியமைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடாபில் உயர்கல்வி பிரதி அமைச்சர் டி பி ஏக்கநாயக்கவிடம் வினவிய போது, கடந்த 30 வருட யுத்தத்தை நிறைவு செய்த அரசாங்கம் வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் உரிய கவனம் செலுத்தும் எனவும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் தமது முறைப்பாட்டை நிராகரிக்கவில்லை

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் தமது முறைப்பாட்டை நிராகரிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா சார்பில் தாம் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தில் மேற்கொண்ட முறைப்பாடு நிராகரிக்கப்பட்டதாக, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க வெளியிட்ட கருத்து உண்மைக்குப் புறம்பானதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


கடந்த 2 ஆம் திகதி சரத்பொன்சேகா சார்பில் சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தில் தாம் மேற்கொண்ட முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஒன்றியத்தின் மனித உரிமைக் குழுவில் தாம் முறைப்பாட்டை மேற்கொண்டதாகவும், அரசாங்கத்தரப்பினர் அதற்கு எதிராக வாதாடியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முடியுமென்றால் தமது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டதென்பதை நிரூபிக்குமாறு ஜயலத் ஜயவர்த்தன ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சவால் விடுத்துள்ளார்.தமக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச பாாளுமன்ற ஒன்றியத்தின் மனித உரிமைகள் குழுவின் தலைவராக அரசாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடமையாற்றியுள்ளதாகவும், இவ்வாறான ஓர் நபர் அரசியல் இலாபங்களுக்காக போலியான தகவல்களை வெளியிடுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வதேசத்திடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்



## ஜனாதிபதி தெரிவிப்பு

அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் கடன் வழங்கும் சர்வதேச அமைப்புக்களிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் செயன்முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.இலங்கை தொடர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாக வகையீடு செய்யப்படக் கூடாது என்பதனை உலகத்திற்கு உணர்த்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக முறியடித்த அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் இலங்கையர்கள் என்பதனை மட்டுமன்றி பொருளாதார யுத்தத்தையும் வெற்றிகரமாக முறியடிக்கக் கூடிய வல்லவர்கள் என்பதனை நிரூபிக்கவேண்டுமென அவர் குறிப் பிட்டுள்ளார். இதேவேளை, இளைய தலைமுறையினரை பாதுகாப்பதற்கு பெற்றோரும், மதத் தலைவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி மஹிந் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக, இணைய பாவனை,வீடியோ கேம்கள் மற்றும் திரைப்படங்கள் ஆகியவற்றினால் இளைய சமூகம் தவறான வழியில் செல்லக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை ரன்கொத்த விஹாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சிறுவர்களை தவறான வழிகளில் பயன்படுத்திக் கொள்ள சில தரப்பினர் அதிக முனைப்புக்காட்டி வருவதாகவும் மதத் தலைவர்கள், ஆசிரியர்கள்மற்றும்பெற்றோர்கள் ஆகியோர் இணைந்து சிறுவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமடையச் செய்யவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பௌர்ணமி தினங்களில் எத்தனை பேர் விஹாரைகளுக்குச் சென்று வழிபாடுகளை நடத்துகிறார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.நாட்டில் ஒழுக்க நெறிகள் சீர்குலைந்திருந்தால் எவ்வளவு பொருளாதார அபிவிருத்தியை எட்டினாலும் பயனில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சீனாவில் டைனோசர் படிமங்கள் கண்டுபிடிப்பு

சீனாவில் டைனோசர் படிமங்கள் இருப்பதை அந்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். சீனாவில் யூனான் மாகாணத்தில் நடத்தப்பட்டு வந்த ஆராய்ச்சியில் 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்த டைனோசரின் படிமங்கள் கண்டு பிடித்தனர். தற்போது கிடைத்துள்ள படிமங்களின் படி பார்க்கும் போது 120 செ.மீற்றர் நீளமும் 70 செ.மீ உயரமும் நீளமான வாலும் கூர்மையான பற்களும் கொண்டதாக இருந் திருக்க கூடும்.

மேலும் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட டைனோசரின் படிமானங்கள் முழுமையாக கிடைத்த பின்னரே அதற்குப் பெயர் சூட்ட முடியும் என்று ஆராய்ச்சியாளர் டாங் கூறினார். (ஸ்ரீ-2)




# யூதர்கள் அல்லாதவர்களுக்கு இஸ்ரேலிய குடியுரிமை வழங்க அந்நாட்டு பிரதமர் திட்டம்

(ஜெருசலேம்)

யூதர்கள் அல்லாத பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் குடியுரிமை வழங்கும் புதிய சட்டத்திற்கு அந்நாட்டு பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டில் யூதர்கள் அல்லாத சிறுபான்மை பாலஸ்தீனர்கள் தங்களுக்கு இஸ்ரேல் குடியுரிமை கேட்டு போராடி வந்தனர்.

இந்நிலையில் இஸ்ரேலின் வாராந்திர மந்திரிசபைக்கூட்டம் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகூ தலைமையில் கூடியது. இதில் யூதர்கள் அல்லாதவர்களுக்கு இஸ்ரேல் குடியுரிமை வழங்கும் மாசோதா கொண்டு வரப்பட்டது. பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

30 அமைச்சர்கள் கொண்ட பெஞ்சமின் நெட்டன்யாகூ தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. எனினும் இடது முன்னணியின் 5 அமைச்சர்கள் எதிராக வாக்களித்தனர். இஸ்ரேல் அரேபிய உறுப்பினர்கள் இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த புதிய சட்டம் இஸ்ரேலியர்களை திருமணம் செய்து கொண்ட பாலஸ்தீனர்கள் வெளிநாடுகளுக்கு பணிக்கு சென்று திரும்பியவர்கள் மட்டுமே பொருந்தும். இது குறித்து இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் அவிக்டர் லைபன்மேன் கூறுகையில்,


இஸ்ரேல் பாலஸ்தீன அமைதிப்பேச்சு வார்த்தைக்கு இந்த புதிய சட்டம் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றார். இது போன்று சட்டம் கடந்த 2009 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு பின்பு நிராகரிக்கப் பட்டது. பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகூ கூறுகையில், இஸ்ரேலில் உள்ள சிறுபா ன்மை பாலஸ்தீனர்களுக்கு தான் இந்த சட் டம் பாலஸ்தீன அகதிகள் மீண்டும் இஸ்ரேல் திரும்பும் உரிமையினை இந்தச் சட்டத்தினால் பெறமுடியாது என்றார். (ஸ்ரீ-2)

# பங்களாதேஷில் பயணிகள் பஸ் ஆற்றில் மூழ்கியதில் 40 பேர் பலி

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் பயணிகள் பஸ் ஆற்றில் பாய்ந்து ஏற்பட்ட விபத்தில் 40 பேர் பலியாயினர். மேலும் நீரில் மூழ்கியவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

பங்களாதேஷின் மேற்கு டாக்காவில் அமீன்பசார் நகரை நோக்கி 50 பேருடன் பயணிகள் பஸ் சென்று கொண்டிருந்தது. செலாஹ்பூர் பாலம் அருகே மாலை 5.45 மணியளவில் வந்து கொண்டிருந்த போது பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தூராக் நதியில் பாய்ந்தது.

இதில் பஸ்சில் பயணித்த 50 பேர் ஆற்றில் மூழ்கினர் சம்பவம் நடந்து 12 மணி நேரமாகியும் மூழ்கிய பஸ்ஸை கண்டு பிடிக்க முடியாமல் போனது. இதனால் 22 பேர் கொண்ட குழுவினர் படகு மூலம் பஸ்ஸை தேடினர். இதில் 40 பேர் பலியானதாகவும் ஒரு சிலர் உயிருடன் (நீச்சல் தெரிந்தவர்கள்) தப்பித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவம் மீட்புப் பணியில் ஈடுபட்டு பலியானவர்களின் உடல்களை மீட்டனர். விபத்தில் உயிர் தப்பிய தபான்குமார் என்பவர் கூறுகையில், சம்பவ இடத்திற்கு பொலிசர் தாமதமாக வந்தனர். உள்ளூர் வாசிகள் தான் மீட்புப்பணியில் தீவிரம் காட்டினர்.


மூழ்கிய பேருந்தை மீட்கும் பணிகளில் மீட்புப் படையினர் ஈடுபட்ட போது...

மேலும் மீட்புப்படையினரும் குறைந்த அளவே வந்திருந்ததால் உயிருக்கு போராடியவர்களை காப்பாற்ற முடியாமல் போனது என்றார். (ஸ்ரீ-2)

# தலிபான்களுடன் அமைதிப் பேச்சு நடத்தும் குழுவின் தலைவராக ரப்பானி நியமனம்

(காபூல்)

தலிபான்களுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி போரை முடிவுக்கு கொண்டு வர ஆப்கானிஸ்தான் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக ஒரு குழுவை அந்த நாட்டு அரசாங்கம் அமைத்து உள்ளது. இந்தக் குழுவின் தலைவராக புர்கானுதீன் ரப்பானி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்தவர். கடந்த 1980 களில் ஆப்கானிஸ்தானை ரஷ்ய இராணுவம் ஆக்கிரமித்து இருந்த போது அதை எதிர்த்து போராடிய குழுவின் தலைவராக இருந்தவர்.

இப்போது தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 68 பேர் கொண்ட அமைதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு தலைவராக ரப்பானி நியமிக்கப்பட்டு இருக்கிறார். (ஸ்ரீ-2)

# நேபாளத்தில் புதிய பிரதமரை தெரிவு செய்ய 12 ஆவது முறை நடந்த தேர்தலும் தோல்வி



(காத்மாண்டு)

நேபாளத்தில் புதிய பிரதமரை தெரிவு செய்வதற்காக 12 ஆவது முறை நடந்த தேர்தலும் தோல்வியில் முடிந்துள்ளது. நேபாளத்தில் 2008 இல் தேர்தல் நடந்து மன்னராட்சி முடிவுக்கு வந்தது. மாவோயிஸ்டுகள் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றனர். இருப்பினும் நேபாள பாராளுமன்றில் மொத்தமுள்ள 601 இடங்களில் 238 இடங்களைத் தான் பிடிக்க முடிந்தது. இதனால் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைந்தது.

மாவோயிஸ்டுகளை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என பிரதமராக பொறுப்பேற்ற பிரசாந்தா இராணுவ தளபதியிடம் வற்புறுத்தினார். ஆனால் இதை ஏற்க இராணுவத் தளபதி மறுத்ததால் அவரை வேலையில் இருந்து நீக்கினார் பிரசாந்தா. மன்னராட்சி காலத்தில் நியமிக்கப்பட்ட இராணுவத் தளபதியை பதவி நீக்கம் செய்ய பிரதமருக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி இந்த உத்தரவை ஜனாதிபதி ராம்பரன் யாதவ் இரத்து செய்தார்.

இதனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு பிரசாந்தா தனது பதவியை கடந்த ஆண்டு இராஜினாமா செய்தார். இதையடுத்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாதவ் குமார் நேபாள் பிரதமரானார். அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு இவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி இவரை இராஜினாமா செய்யும் படி மாவோயிஸ்டுகள் வற்புறுத்தினர்.

தேசிய அரசு உருவாக்குவதற்காக தனது பதவியை மாதவ்குமார் நேபாள் இராஜினாமா செய்தார். கடந்த ஜுன் மாதம் முதல் புதிய பிரதமரை தெரிவு செய்ய பாராளுமன்றில் 12 முறை வாக்கெடுப்பு நடந்து விட்டது. நேற்று முன்தினம் வரை யாரும் பிரதமராவதற்குரிய அளவுக்கு வாக்குகளைப் பெறவில்லை.

வெறுத்து போன பிரசாந்தாவும் , மாதவ் குமார் நேபாள் உள்ளிட்ட தலைவர்கள் இனி நாங்கள் பிரதமர் தேர்தலில் போட்டியிட போவதில்லை என கடந்த மாதம் ஒதுங்கி கொண்டனர். ஆனால் நேபாள் காங்கிரஸ் தலைவர் ராம்சந்திர புதியால் மட்டும் பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து விலக மாட்டேன் என அடம்பிடிக்கிறார். இவர் போட்டியிலிருந்து விலகினால் தேசிய அரசு உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆனால் மாவோயிஸ்டுகள் ஆயுதத்தை துறக்காதவரை அவர்கள் ஆட்சி ஏற்படுவதற்கு ஒத்துழைக்கமாட்டோம் என பாராளுமன்றத்தில் 114 இடங்களை பெற்றுள்ள நேபாள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 12 ஆவது முறையாக நடந்த பிரதமர் தேர்வில் ராம்சந்திர புதியாலுக்கு 89 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. பாராளுமன்றில் 119 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். இதனால் நேற்றைய தேர்தலும் தோல்வியில் முடிந்தது. அடுத்த கட்ட தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)




வடகொரியாவின் தலைவராக அடுத்து ஆட்சியைக் கைப்பற்ற இருக்கும் தற்போதைய அதிபர் இரண்டாம் கிம்ஜோங்கின் (வலது) மகன் கிம் ஜோங்-இல் (நடுவில்) முதன் முதலாக பையோங்கிங் நகரில் நடந்த இராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்கள் முன் தோன்றினார்.

# உற்சாகம் தரும் உடற்பயிற்சி நீச்சல்

ஒவ்வொரு மனிதனுக்கும் உடற்பயிற்சி அவசியம். தினமும் ஏதோ ஒரு வகையில் உடற்பயிற்சி செய்து வந்தால் அதுவே ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். அத்தகைய உடற்பயிற்சிகளில் நீச்சலும் ஒன்று கிராம மக்களில் ஆண் பெண் பாகுபாடின்றி அனைவருக்கும் நீச்சல் தெரிந்திருக்கும் கிராமத்தைச் சுற்றி குளம், கிணறுகள் இருப்பதால் அவற்றில் நீந்தி நீச்சல் கற்றுக்கொள்வார்கள்.

நன்கு நீந்திக் குளிப்பதால் கிராம மக்கள் இன்றும் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நகர மக்களில் வசதி படைத்தோர் நீச்சல் தடாகம் சென்று நீந்துகிறார்கள். நடுத்தர வர்க்கத்திற்கு இது போல் ஏதும் இல்லை. குளங்கள் காணாமல் போய்விட்டன. மீதம் இருக்கும் குளங்கள் சாக்கடைகளாக மாறிவிட்டன. இதனால் நீச்சல் என்றால் என்ன என்று கேள்வி கேட்கும் நிலைக்கு மாறிவிட்டனர் இன்றைய தலைமுறையினர். உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் ஒரே சமயத்தில் இயங்கக் கூடிய ஒரே உடற்பயிற்சி நீச்சல் தான்.



**மார்பு நீச்சல் அல்லது தவளை நீச்சல்**


இது தோள்பட்டை கழுத்து கால்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கும் நீச்சலாகும்.

**விரைவு நீச்சல்**

இடுப்புப்பகுதி தசைகளும் இடுப்பு எலும் பும் முதுகெலும் பும் உறுதியாகும்.

**பின்நீச்சல்**

கெண்டைக்கால் தசைகள் இடுப்புப் பகுதி தசைகள் வலுப் பெறும்.



**வண்ணத்துப்பூச்சி நீச்சல்**

இதனால் வயிற்றுப் பகுதியில் உள்ள தசைகள் முதுகுப் பக்கமுள்ள தசைகள் நன்கு வலுப்பெறுகின்றன.

**நீச்சலின் பயன்கள்**

உடலில் உள்ள தேவையற்ற எடை குறை கிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் உடலுக்கு புத்துணர்வையும் தரக்கூடி யது. தொப்பையைக் குறைக்கும்.

✠ நீச்சலின்போது நீர் உடலுக்கு இயற்கை தடுப்பு ஆற்றலாகப் பயன்படுகிறது.

✠ உடலின் உள் உறுப்புகளும் நரம்புகளும் தக்க பயிற்சி கிடைப்பதால் அவற்றின் செயல்பாடுகள் சீராகின்றன.

✠மனக் கவலை, மன அழுத்தம், எதிலும் நாட்டமின்மை போன்ற உள்ளக் கோளாறுகள் நீங்கும் நீந்தும் போது மனச் சிதறல் நீங்கி மனம் ஒரு நிலையடைகிறது.

✠உடலின் இரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன் இதயத்திற்கும் நுரையீரலுக்கும் வலுவூட்டம் கொடுக்கிறது.

✠கைகால், தோள்பட்டை பகுதி தசைகள் நன்கு வலுப்பெறுகின்றன. மூட்டு வலி கணுக்கால் வலி நீங்கும்.

✠இடுப்பு வலி குறைவதுடன் முதுகெலும்பின் எலும்புமுடிச்சுகள் பலம் பெறுகின்றன.

✠கழுத்து வலி, தோள்பட்டை வலி போன்றவை நீங்கும்.

✠செரிமான சக்தியைத் தூண்டும் அஜீரணக் கோளாறைப் போக்கும் நன்கு பசியைத் தூண்டச் செய்யும். மலச்சிக்கல் நீங்கும்.

✠ஆழ்ந்த உறக்கத்திற்கு நீச்சல் மாபெரும் மருந்தாகும்.

✠ உடலுக்கும் உள்ளத்திற்கும் பயன் தரும். நீச்சல் பயிற்சியை அனைவரும் மேற்கொண்டு ஆரோக்கியம் பெறுவோம்.

# செய்தித் துளிகள்

**நவம்பர் -மார்ச்**

குளிர் காலத்தில் முடிந்தவரை வெதுவெதுப்பான சூழ்நிலையில் இருப்பது அவசியம். ஒருவரால் அவரின் எதிர்ப்பு சக்தியை பொறுத்து குளிரை தாங்க முடியும். ஆனால் குளிரால் தொற்றும் தொற்றுக்கிருமியை சாதாரணமாக ஒதுக்க முடியாது. கோடை காலத்தை விட மழைக்காலம் குளிர் காலத்தில் தான் தொற்றுக் கிருமிகள் எளிதில் பரவும்.தொற்றும் அதனால் நவம்பர் முதல் மார்ச் வரை உஷாராகவே இருப்பது நல்லது.

**சாட் வரும் பருவம்.**

ஆங்கிலத்தில் சாட் எனப்படும் "சீசனல் அபெக்டிவ் டிசார்டர்" என்ற பாதிப்பு குளிர் காலத்தில் தான் அதிகமாக ஏற்படுகிறது. விற்றமின் டி இல்லாததால் ஏற்படும் பருவ உடல் நிலை பாதிப்புகளை இது குறிக்கும். உடல் வலி, காய்ச்சல் உட்பட எல்லா பாதிப்பும் இதில் அடங்கும். விற்றமின் டி. சத்து சில உணவு வகைகளில் தான் கிடைக்கிறது. குளிர் காலத்தில் இந்த உணவுகளை சேர்த்துக் கொள்வது முக்கியம்.

**வைரஸ்-பக்டீரியா**


குளிர் மழைக்காலங்களில் எளிதில் பரவுவது வைரஸ் தொற்றுக்கிருமிகள் தான். கோடை காலத்தில் வருவதை விட ஜலதோஷம், காய்ச்சல் போன்றவை குளிர் காலத்தில் யாருக்கும் வரத்தான் செய்யும்.

அதே சமயம் பக்டீரியா தாக்குதல் என்பது குளிர் காலத்தை விட கோடை காலத்தில் தான் பரவும். அதிலும் மிக அதிக வெப்பம் இருந்தால் தொற்றாது. குளிர் கலந்த வெப்ப சூழ்நிலை இருந்தால் பக்டீரியாக்கள் பிராணிகள், பறவைகளில் இருந்து தொற்றும். (தொடரும்)

# தினமும் தேவை குரோமியம்!

இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவு அதிகரித்தால் குரோமியம் உப்பு குறைந்துவிட்டது என்பதே அர்த்தம்.

1999 இல் இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள், ஒரு வயது முதல் 75 வயது வரை உள்ள 41 ஆயிரம் பேர்களின் இரத்தம், முடி, வியர்வை முதலியவற்றில் குரோமியம் அளவு எப்படி இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்தார்கள்.



வயது ஆக, ஆக குரோமியம் உப்பின் அளவு பாதியாகக் குறைந்துகொண்டே தான் வந்துள்ளது. இதற்கு உண்மையான காரணம், நன்கு சுத்திகரிக்கப்பட்ட (ரீஃபைண்ட்) உணவுப் பொருட்களையே அதிகம் சாப்பிடுவது தானாம். இதில் குரோமியம் உப்பு குறைவாக இருப்பதும் ஒரு காரணம். நன்கு சுத்திகரிக்கப்பட்ட மாவுப்பொருட்களிலும் குரோமியம் உப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.

இதைத் தவிர்க்க விரும்பினால்,கேழ்வரகு அல்லது பார்லி அரிசியை காலை உணவில் சேருங்கள். பகலில் கரட், முருங்கைக் கீரை, கொண்டைக்கடலை, பீட்ரூட், வெங்காயம் ஆகிய உணவுகளையும் சாப்பிடலாம்.

மாதுளம்பழம், தக்காளி, அன்னாசிப் பழம் முதலியவைகளில் இந்த உப்பு போதுமான அளவு உள்ளது. இஞ்சியும், பாதாம் பருப்பும், தவறா மல் சேர்க்க வேண்டும். இதயக்கோளாறு மற்றும் நீரிழிவு நோயாளிகள் இந்தப் பட்டியல்படி சாப்பிட்டு வந்தால், குரோமியம் அளவு சரியாக இருக்கும்.

விருந்தின்போது கேக்,இறைச்சி மூலம் சேரும் கொழுப்பு, படியாமல் இருக்க வெற்றிலை போட்டுக் கொள்ளவேண்டும். இதில் இந்த குரோமியம் உப்பு நன்கு கிடைப்பதால், கொழுப்பால் இரத்தத்தை நிர்வகிப்பது தடைபடாமல் இருக்கும்.

பல நோய்களுக்கு இந்தத் தாது உப்புக்குறைவே காரணமாக இருக்கிறது. எனவே, எல்லா வயதுக்காரர்களும் கொண்டைக் கடலை, முருங்கைக்கீரை, வெங்காயம் முதலியவற்றையாவது அவ்வப்போது தவறாமல் உணவில் இடம்பெறுமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.




# உடல் உறுப்புக்கள்-சருமம்

சென்றவாரத் தொடர்ச்சி

**நடுத்தோல்**

இப்பகுதியில்தான் இரத்த நாளங்கள் மென்மையாகவும் சிறு சிறு நாளங்களாகவும் பிண்ணிப் பிணைந்துள்ளன. இவற்றின் முக்கியப் பணி இரத்தத்தில் உள்ள ஒட்சிசன் மற்றும் சத்துக்களை உறிஞ்சிக் கொள்வதுடன் வெளியேற்ற வேண்டிய கழிவுகளையும் வியர்வைத் துளை வழியாக வெளித்தள்ளுகிறது.

வெளிப்புறத் தோலில் ஏற்படும் பாதிப்புகளை உடனே சரிசெய்யும் பணியை நடுத்தோல் பகுதி சிறப்பாக செயற்படுத்தும். இந்தப் பகுதியில் எண்ணெய் சுரப்பிகள் உள்ளன. இதனை சிபசியஸ் என்று ஆங்கிலத்தில் கூறுவர்.இது உற்பத்தி செய்யும் எண்ணெய் சீபம் என்று அழைக்கப்படுகிறது. இது உடல் உற்பத்தி செய்யும் இயற்கை எண்ணெய் ஆகும்.

இந்த எண்ணெய் தோல் பகுதி சுருங்கி விரிவதற்கு ஏதுவாக அமைகிறது. இது உடலில் உள்ள நீர்ச்சத்து வெளியேறாதபடி தடுக்கிறது. இது நன்கு உற்பத்தியானால் தோல் நீரை உள்வாங்காது. வியர்வைச் சுரப்பிகளில் சுரக்கும் வியர் வையுடன் இந்த எண்ணெயும் சேர்ந்து வெளி யேறுகிறது. இதனுடன் அசுத்த நீர்களும் வெளியேறும்.

**உட்புறத் தோல்**

இது தோலின் அடிப்பகுதியாகும் இப்பகுதி கொழுப்பு நிறைந்த பகுதியாகும். இப்பகுதி தோலில் ஏற்படும் புறு மாற்றங்களுக்கு தகுந்த மாறும் தன்மை கொண்டது. உடலின் வெப்பநிலை, குளிர் போன்ற திடீரென்று ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உடலின் தன்மையை மாற்றி பாதுகாக்கும்.

இப்பகுதியில் மயிர்க்கால்கள் உற்பத்தி ஆகின்றன. மயிர்க்கால்கள் வெளி வருகின்றன. உள்ளங்கை, உள்ளங்கால், உதடுப் பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில் முடி வளரும். இப் பகுதி அடிப்பகுதியாக இருப்பதால் உணவு மாறுபாட்டால் உண்டாகும் பாதிப்புகளால் இப் பகுதியும் பாதிக்கப்படும்.

பொதுவாக வெளிப்புறத்தில் குளிர் மற்றும் அதிக சூட்டுக்குத் தகுந்தவாறு உடலின் உட்புற பகுதியை மாற்ற தோலில் உள்ள இரத்த நாளங்கள், வியர்வை சுரப்பிகள் வேகமாக செயற்பட்டு உடலில் வெப்ப சம நிலையை ஏற்படுத்தும்.

உடலின் வெப்பநிலை 98.60 ஆக இருக்க வேண்டும். அதாவது 370 செல்சியஸ் ஆக இருக்க வேண்டும். இதில் மாற்றம் உண்டானால் உணர்வு நாளங்கள் மூளைக்கு செய்தியை அனுப்பி அங்குள்ள ஹைபோதாலமஸ் என்ற பகுதியைத் தூண்டி அவை உடலின் வெப்ப நிலையை இரத்த நாளங்களுக்கு செய்திகளை அனுப்பி உடலுக்குத் தேவையான உஷ்ணத்தை கொடுக்கிறது. இதனால் கை, கால், முகம்சிலசமயங்களில்சிவந்து காணப்படும்.

இதுபோல் உடல் சூடு அதிகமானால் அவை வியர்வைச் சுரப்பிகளைத் தூண்டி அதன் மூலம் வியர்வையையும் உஷ்ணத்தையும் வெளியேற்றுகிறது.

**சருமத்தைப் பாதிக்கும் நோய்கள்**

சிரங்கு, தொழுநோய், அலர்ஜி போன்றவை சருமத்தைப் பாதிக்கும் நோய்களாகும்.

**சருமத்தைப் பாதுகாக்க**

☞ தினமும் இருவேளை குளிக்க வேண்டும். சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும்.

☞ இறுக்கமான ஆடைகள் மற்றும் ஈரமான ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

☞ உடலில் உள்ள வியர்வை நன்கு வெளியேறும் வகையில் உடற்பயிற்சி செய்வது நல்லது.

☞ உச்சி வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி அலைய நேரிட்டால் அதிக நீர் அருந்துவது அவசியம். மென்மையான பருத்தியினாலான ஆடைகளை அணிய வேண்டும்.


☞ வாசனை திரவியங்கள் சில சமயங்களில் ஒவ்வாமையை உண்டுபண்ணும். முடிந்த வரை இயற்கை வாசனைப் பொருட்களை உபயோகிப்பது நல்லது.

☞ வாரம் இரு முறை எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும். இதனால் சருமம் பளபளப்பதுடன் உடலின் உள்உறுப்புகள் பலப்படும்.

☞ அதிக மன அழுத்தம் ,கோபம் முதலியவற்றை தவிர்க்க வேண்டும்.

உடலின் உள்ளே உள்ள உறுப்புகளில் பாதிப்பு ஏற்பட்டாலும் அது சருமத்தின் வழியே தான் வெளிப்படும். இதனால் சருமத்தின் ஆரோக்கியத்தை பேணுவது மிகவும் அவசியம். (முற்றும்)

# வீட்டிலேயே புற்றுநோயை பரிசோதிக்கும் நவீன ஸ்கானர் இயந்திரம் கண்டுபிடிப்பு



புற்றுநோய் மருத்துவ உலகிற்கு சவாலான கொடிய வியாதி. இதன் அறிகுறிகளை கண்டுபிடிப்பது கடினமாகும். இந்தக் கொடிய வியாதியையும் எளிமையாகப் பரிசோதிக்க இந்தியர் ஒருவர் நவீன ஸ்கேனரை உருவாக்கியுள்ளார்.

இரத்தப் பரிசோதனை மூலமே எந்த வகையான புற்றுநோயையும் கண்டுபிடித்து விடும் அந்த நவீன ஸ்கானர். டாக்டர்களிடம் கூட செல்ல வேண்டாம். நீங்களே பரிசோதித்து பார்க்கும் வகையில் எளிமையானது. விலை குறைவானது இந்த ஸ்கானர். அசாம் மாநிலத்திலுள்ள வடகிழக்கு குன்றுகள் பல்கலைக்கழக (என்.இ.எச்.யு) பேராசிரியர் ஆர்.என்.சாரன் இந்த கருவியை வடிவமைத்துள்ளார்.

பயோ மாகுலர் மார்க்கர் எனப்படும் இந்தக் கருவி கையாளுவதற்கு எளிமையானது. தனிநபர் கூட பரிசோதித்துப் பார்க்கலாம். சில துளிகள் இரத்தம் கொடுத்தால் போதும். சிறிது நேரத்தில் பல்வேறு தகவல்களை அட்டவணைப்படுத்தி காட்டிவிடும். கருப் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை போன்ற சோதனைகளையும் செய்து கொள்ளலாம்.

இதற்கு 100 தொடக்கம் 150 ரூபாய்தான் செலவாகும். 20 ஆண்டுகால முயற்சிக்குப் பின் சாரன் இதை உருவாக்கி இருக்கிறார். இந்தியர்களின் அடிப்படை நிலையை உணர்ந்து கொண்டு இதை வடிவமைத்ததாக அவர் பெருமிதம் கொள்கிறார்.

எளிமையான இந்த ஸ்கானர் உலகம் முழுவதும் மிகுந்த வரவேற்பை பெறும். வருங்காலத்தில் அதிக எண்ணிக்கையில் புழக்கத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .(ஸ்ரீ-2)

# ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு இடம் உறுதி

ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு தற்காலிக உறுப்பினர் அந்தஸ்தில் இடம் கிடைப்பது உறுதியாகிவிட்டது. பொது அவையில் இன்று நடக்க இருக்கும் தேர்தலில் இந்தியா எளிதாக வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. பாதுகாப்பு அவையில் தற்காலிக உறுப்பினர் இடங்கள் ஆசியா, அபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா போன்ற பிராந்தியங்களில் இருந்து தலா ஒரு நாட்டுக்கு வழங்கப்படும் இதற்கான தேர்தல் ஐ.நா. பொது அவையில் இன்று நடக்க இருக்கிறது.

ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்குப் போட்டியாக இருந்த கஜகஸ்தான் இந்த ஆண்டு தொடக்கத்தில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டது. இதனால் இந்தியா போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகி றது.

இதேபோல் ஆபிரிக்க பிராந்தியத்திலிருந்து தென்னாபிரிக்காவும் லத்தீன் அமெரிக்காவிலிருந்து பிரேசிலும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய இதரப் பிரிவு இடங்களுக்கு ஜேர்மனி , போர்த்துக்கல், கனடா ஆகிய 3 நாடுகள் போட்டிடுகின்றன.

ப்ரிக் கூட்டமைப்பில் இருந்து இந்தியா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகள் ஒரே நேரத்தில் பாதுகாப்பு அவையில் உறுப்பினராக இடம்பெறப்போவது சிறப்பம்சமாகும்.

இந்த இடத்தைப் பெறுவதற்காக கடந்த 3 ஆண்டுகளாக இந்தியா பல நாடுகளுடன் பேச்சு நடத்தி வந்தது குறிப்பிடத்க்கது. பாதுகாப்பு அவையில் தற்காலிக நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும் தமக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தை வழங்க வேண்டும் எனவும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# பீகாரில் படகு விபத்து; 36பேர் உயிரிழப்பு




இந்தியாவின் பீகார் மாநிலத்தில் நேற்று முன்தினம் சுமார் 70 பயணிகளை ஏற்றிச் சென்ற படகொன்று கங்கை யாற்றில் கவிழ்ந்ததில் சுமார் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கிய ஏனையோர் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

மேலும் நீரில் மூழ்கியதாகக் கூறப்படும் இருவரின் உடல்களை மீட்புப் படையினர் தேடிவருவதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலதிகமாகப் பயணிகளை ஏற்றிச் சென்றமையும், கங்கையாற்றில் சுழியேற்பட்டமையுமே விபத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

படகின் உரிமையாளரும் செலுத்துனருமான கோளு மஞ்சானி என்பவர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டயறியில் எழுதிய காதல் கவிதையால் வந்த வினை

காதலியைப் பற்றி கவிதை எழுதி வைத்திருந்த நாட்குறிப்பேட்டைக்காட்டி சக மாணவன் மிரட்டியதால் வேதனையடைந்த மாணவர் கல்லூரி விடுதியில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சித்தூர் அடுத்த பலமனோர் பிரசாந் நகரைச் சேர்ந்தவர் சுப்பிரமணியம். இவரது மகன் சந்தோஷ்குமார் (வயது -18) என்பவர் சித்தூர் முருகானந்தாம் பாடசாலையில் உள்ள தனியார் கல்லூரி விடுதியில் தங்கி இன்டர்மீடியட் 2ஆம் ஆண்டு படித்து வந்தார்.

நேற்று முன்தினம் மாலை விடுதி அறையில் மின்விசிறியில் சந்தோஷ்குமார் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சித்தூர் 2ஆவது பொலிஸ் நிலையத்தில் புகார்செய்யப்பட்டது. அதன் பேரில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரித்தனர். இங்கு சந்தோஷ்குமார் தன்னுடன் படிக்கும் ஒரு மாணவியை காதலித்துள்ளதாகவும் இவர் தினமும் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். நாட்குறிப் பேட்டில் தனது காதல் விவகாரம், காதலியைப் பற்றி கவிதைகளையும் எழுதி உள்ளார்.

இந்நிலையில்இந்த நாட் குறிப்பேடு, அதே கல்லூரியில் படிக்கும் மற்றொரு மாணவர் கையில் சிக்கியது. அந்த மாணவர், காதல் விவகாரங்கள் குறித்து சக மாணவர்களிடம் சொல்லப் போவதாக சந்தோஷ்குமாரை மிரட்டியுள்ளார்.

இதையடுத்து இருவருக்கும் இடையே இரு தினங்களுக்கு முன்பு தகராறு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து எங்கே தன்னுடைய காதல் விவகாரம் வெளியே தெரிந்து விடுமோ என அஞ்சிய சந்தோஷ்குமார் நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# தமிழக அகதிகள் முகாம்களில் சி.ஐ.டி.பொலிஸார் சோதனை

(புதுச்சேரி)

புதுவை தேங்காய் திட்டு துறைமுகத்தில் இருந்து கடந்த சில தினங்களுக்கு முன் விசை படகு மூலம் இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியா்வுக்கு கள்ளத்தனமாக அழைத்துச் செல்வதாக உளவுத்துறை பொலிஸாருக்குத் தகவல் வந்தது. இதனையறிந்து படகில் இருந்தவர்கள் இலங்கை அகதிகளை இறக்கி விட்டு படகை காரைக்கால் அரசலாற்று பாலத்தில் நிறுத்தி விட்டு தப்பியோடினர்.


இதுபற்றி தகவலறிந்த புதுவை சி.ஐ.டி. பொலிஸார் காரைக்கால் சென்று படகை கைப்பற்றினர். இதுதொடர்பாக தீவிர விசாரணை நடத்தியதில், புதுவை வீரம்பட்டினம் கவுன்சிலர் சக்திவேல் தலைமையில் ஒரு கும்பல் இலங்கை அகதிகளை கடல்வழியாக வெளிநாட்டுக்குஅனுப்பமுயன்றதுதெரியவந்தது.

இதையடுத்து கவுன்சிலர் சக்திவேல், லோகு அய்யப்பன்,ஜீவா,சிலோன் கண்ணன் ஆகியோர் மீது சி.ஐ.டி. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். இதனிடையே காரைக்கால் அருகே உள்ள ஊழியபத்து கிராமத்தில் ஒருதோப்பில் கேன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 300 லீற்றர் டீசலை உணவு கடத்தல் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றினர்.

இவ்வளவு டீசல் அப்பகுதிக்கு எப்படி வந்தது, எதற்காக பதுக்கி வைக்கப்பட்டது? என்பது குறித்து சி.ஐ.டி. பொலிஸார் விசாரணை நடத்தினர். இது தொடர்பாக காரைக்காலை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதுபற்றி சி.ஐ.டி. பொலிஸ் கண்காணிப்பாளர் ரவீந்திரனிடம் கேட்ட போது, இலங்கை அகதிகளை கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லமுயன்ற கவுன்சிலர் சக்திவேல் உட்பட 4பேரை கைது செய்துள்ளோம். சக்திவேல் தொடக்கத் தொலைபேசி நம்பர் மூலம் தப்பி சென்றவர்களை கண்டுபிடிக்க முடிவு செய்துள்ளோம். இதனிடையே காரைக்காலில் பதுக்கி வைக்கப்பட்ட ஆயிரத்து 300 லீற்றர் டீசலை உணவு கடத்தல் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த டீசலை சக்திவேல் படகில் இருந்து மீட்டு மறைத்து வைக்க காரைக்கால் பகுதியைச் சேர்ந்தவர் உதவிசெய்து இருப்பதாக எங்களுக்கு தகவல் வந்தது.இது தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதுபற்றி விசாரிக்க சி.ஐ.டி பொலிஸார் காரைக்கால் செல்ல உள்ளனர்.

இதனிடையே படகில்தப்பிச்செல்லமுயன்ற அகதிகள் யார் என்பதை கண்டுபிடிக்க தமிழகத்தையொட்டியுள்ள அகதிகள் முகாம்களில் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளோம். முதல் கட்டமாக தற்போது சென்னையை சுற்றியுள்ள அகதிகள் முகாம்களில் விசாரணை நடத்திவருகிறோம் என்றார். (ஸ்ரீ-2)




புவிவெப்பமயமாதல் விழிப்புணர்வுக்காக பெரம்பூர் கல்கி ரங்கநாதன் பள்ளி மாணவர்கள், சென்னை மெரினாவில் பிரமாண்ட மணல் சிற்பத்தை உருவாக்கினர். புவி வெப்பமயமாதலைத் தடுக்க எல்லாவகையிலும் முயல்வோம் என மாணவ, மாணவியர் உறுதியெடுத்துக்கொண்டனர்.

# வடமாகாணத்தில் பலகோடி ரூபா செலவில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு நடவடிக்கை

## 6 முன்னணி நிறுவனங்கள்முதலீடு

வடமாகாணத்தில் பல கோடி ரூபா செலவில் பாரிய முதலீடுகளை மேற் கொள்ள ஆறு முன்னணி தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறிக்கும் முன்னணி தொழிற்சாலைகளின் முக்கிய பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போது வட மாகாணத்தில் முதலீடு செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு இணக்கம் காணப்பட் டுள்ளது.

வட பகுதியில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெறும்வரையில் கைத் தொழில் துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையிலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரியாலை பிரதேசத்தில் சுமார் 100 கோடி ரூபா செலவில் ஓமோகாலைன் என்ற நிறுவனம் பாரிய ஆடைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ திட்டமிட்டுள்ளது.

இதற்காக வடமாகாண சபை 10 ஏக்கர் நிலப் பரப்பு காணியை வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அடுத்த மாதமளவில் இந்த தொழிற்சாலையை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. என்றும் சுட்டிக்காட்டினார்.

ஹைதராமணி நிறுவனம் வவுனியாவின் நெலுங்குளத்திலும் மாஸ் ஹோல்டிங் நிறுவனம் ஓமந்தையிலும் ஓரிட் அபரல் நிறுவனம் செட்டிக்குளத்திலும் பிரண்டிக்ஸ் நிறுவனம் வவுனியா அல்லது மன்னாரிலும் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளன. ட்ரைஸ்டார் நிறுவனம் கிளிநொச்சி நகரில் பாரிய ஆடைத்தொழிற்சாலை ஒன்றை நிறுவதற்காக அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகளை ஆரம்பித்துள்ளது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். வட மாகாண அபிவிருத் திக்கான ஜனாதிபதி செயலணியின் தலை வரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷவின் ஆலேசனைக்கமைய இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபை ஊடாக மேற் படி தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்த ஆளுநர், இதற்குத் தேவையான சகல ஒத்து ழைப்புகளையும் வடமாகாண சபை மேற்கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேபோன்ற தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுவதன் மூலம் வட மாகாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் இவர்களுக்குத் தேவையான புதிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட் டினார். (ஸ்ரீ-2)

## இவ்வருடம் இதுவரை 50 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்

### பொலிஸார் தெரிவிப்பு

இவ்வாண்டில் இதுவரை காலப்பகுதியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் 50 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக 3 ஆயிரத்து 406 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் 773 பாரிய குற்றச் செயல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளும் அடங்குவதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 3 ஆயிரத்து 248 பதிவானதாகவும் இவற்றுள் 109 பெண்கள் கொலையுண்ட சம்பவங்கள் உள்ளடங்கு வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்திலும் நீதவான் நீதிமன்றங்களிலும் வழக்குப் பதிவு செய்யபட்டுள்ளதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் குறிப்பிடுகிறது. (ஸ்ரீ-2)

## நாட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்களுக்கு பார்வைக்குறைபாடு

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் பார்வை குறை பாட்டு நோய்க்கு உட்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேபோன்று 4 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பார்வை குறைபாட்டு நோய் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுவருவதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிறார் போஷணைப் பற்றாக்குறை நீரிழிவு மற்றும் தொ்டர்ந்து சூரிய வெளிச்சத்தை உற்றுநோக்கும் பழக்கம் போன்றவை பார்வை குறைபாட்டு நோய்க்கு முக்கிய காரணங்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பார்வை குறைபாட்டால் அல்லலுறும் நோயாளர்களுள் அதிகரிக்கும் அறிகுறிகளை கொண்டவர்கள் 18 ஆயிரம் பேர்வரை உள்ளனர்.

அதேவேளை வயது முதிர்வு மற்றும் குறை பார்வை கோளாறு போன்றவற்றால் 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் பார்வை குறைபாட்டை கட்டுப் படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## அம்பாந்தோட்டை துறைமுக நீர் நிரப்பும் பணிகள்நிறைவு

அம்பாந்தோட்டை புதிய துறைமுகத்தினுள் நீர் நிரப்பும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

361 மில்லியன் டொலர் செலவில் 43 ஹெக்ரயர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய துறைமுகத்தில் 16 மீற்றர் ஆழத்திற்கு நீர் நிரப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய துறைமுகத்தினுள் நீர் நிரப்பும் பணிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் அளவில் முதலாவது கப்பல் இப்புதிய துறைமுகத்தில் நங்கூரம் இடும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முதல் கட்டத்தில் ஒரே தடவையில் 3கப்பல்கள் நங்கூரம் இடும் வசதிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கை பணியாளர்களின் ஆட்சேர்ப்பை நிறுத்துமாறு சவுதி அரசிடம் கோரிக்கை

சவுதி அரேபியாவுக்கு இலங்கை பணியாளர்களை பணிகளுக்கு அமர்த்து வதை நிறுத்துமாறு சவுதி அரேபியாவின் தேசிய ஆட்சேர்ப்பு குழு அந்த நாட்டு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் 200 முகவர் நிறுவனங் களும் சவுதியின் தேசிய ஆட்சேர்ப்புக் குழுவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத் திட்டுள்ளனர்.

இதன் படி இலங்கை முகவர்களால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் போது அறவிடப்படும் 8ஆயிரத்து 500 ரூபாவை 5 ஆயிரத்து 500 ரூபாவாக குறைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இந்த இணக்கம் கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அமுல் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இதனை இலங்கை முகவர்கள் அமைப்பு நடைமுறைப்படுத்த வில்லை என சவுதி அரேபிய ஆட்சேர்ப்புக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ரியாத்தில் கூடிய சவுதி அரேபியாவில் தேசிய ஆட்சேர்ப்புக்குழு இலங்கைப் பணியாளர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபியாவில் சுமார் 5 இலட்சம் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர்.

இவர்கள் மூலம் ஒரு பில்லியன் டொலர்கள் வரை இலங்கைக்கு அனுப்பப்படுகிறது. (ஸ்ரீ-2)

## யோகேஸ்ரன் எம்.பியை அரசின் பக்கம் இழுப்பதற்கு முயற்சி

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சீனித்தம்பி யோகேஸ்வரனை அரசின் பக்கம் இழுக்கின்றமைக்கான பகிரங்க முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின்



அம்பாறை மாவட்ட எம்.பியான பொடியப்பு பியசேன ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

பியசேன எம்.பி. அரசுக்கு ஆதரவுக்கரம் நீட்டியுள்ளமை ஏற்கனவே நாம் அறிந்ததே. எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெற இருக்கும் அமைச்சரவை மாற்றத்தின்போது இவருக்கு அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்பட்டவுள்ளது.

இந்நிலையில் யோகேஸ்வரன் எம்.பியை அரசின் பக்கம் இழுக்கின்றமைக்கு பியசேன எம்.பி. பலத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஊடகங்களுக்கு பேட்டிகளை வழங்குகின்றபோதெல்லாம் கூட்டமைப்பில் உள்ள ஒரேயொரு நல்ல நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன்தான் என்று புகழாரம் சூட்டி வருகின்றார்.

யோகேஸ்வரன் அரசில் இணைய வேண்டும் என்று பகிரங்க அழைப்பும் விடுத்துள்ளார். கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சாமித்தம்பி இராஜேந்திரனுக்கு ஆதரவாக கடந்த 29 ஆம் திகதி கல்முனையில் பேரணி ஒன்றை பியசேன எம்.பி. நடத்தி இருந்தார்.

அதில் உரையாற்றியபோது, யோகேஸ்வரன் எம்.பி. அரசில் இணைய வேண்டும் என்று பகிரங்க கோரிக்கை விடுத்தார். யோகேஸ்வரன் இணையும் பட்சத்தில் ஜனாதிபதியுடன் பேசி இந்து கலாசார அமைச்சர் பதவியை பெற்றுக்கொடுப்பார் என்றும் உறுதி மொழி வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

## தீவிரவாதிகளை கண்டுபிடிக்க விமான பயணிகளின் காதுகளை ஸ்கான் செய்ய முடிபு

(லண்டன்)

உலகில் தீவிரவாதம் பெருகிவிட்டதால் தீவிரவாதிகளைக் கண்டு பிடிக்க விமான நிலையங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் போலி கடவுச்சீட்டு மூலம் பயணம் செய்வதால் கைரேகை பரிசோதிக்கப் படுகிறது. ஆயுதங்கள் எடுத்து செல்லப்படுகிறதா? என்பதை அறிய உடல் முழுவதும் எக்ஸ்ரே மூலம் ஸ்கான் பரிசோதனை செய்யப்படுகிறது.

தற்போது புதிய முறையை கண்ட பிடிக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பொதுவாக மனிதர்களின் காது அமைப்பு ஒவ்வொருவருக்கும் மாறுபடும் என்பதால் விமானத்தில் பயணம் செய்பவர்களின் காதுகளை ஸ்கான் செய்தால் போதும். அதில் இருந்தே பயணம் செய்பவர் தீவிரவாதியா? அல்லது சாதாரண நபரா? எனத் தெரிந்து விடும்.

இது சரியான திட்டம் என இங்கிலாந்தில் உள்ள சவுதாம் டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஏனெனில் முகத்தில் மேக்கப் போட்டு உருவத்தை மாற்ற முடியும். மேலும் முக பாவனைகள் மூலமும் தப்பிக்க முடியும்.

ஆனால் மனித உறுப்புகளில் காது தனிச்சிறப்பு வாய்ந்தது. அவை ஆளுக்கு ஆள் மாறுபடும். எனவே காதின் அமைப்பை துல்லியமாக ஸ்கான் செய்தாலே போதும். கடவுச்சீட்டுடன் வருபவர் சரியானவர்களா அல்லது போலியா? என தெரிந்து விடும் என தெரிவித்துள்ளனர். இக்கருத்து உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி. – பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடக்கு மாகாண அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் வவுனியாவில் !

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா இராணுவத் தளத்தில் நடைபெறவுள்ளது.

இத் தகவலை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா இராணுவத் தளத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான தயார்ப்படுத்தல் கூட்டம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் வடக்குமாகாண அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் சமர்பிக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டது.

அத்துடன் அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம், எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ச-5)

# தரம்- 5 மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்

## கிளி.மத்திய கல்லூரி அதிபர் அறிவிப்பு

கிளிநொச்சிமத்திய கல்லூரியில்கல்விகற்று 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜா அறிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மேற்படி மாணவர்களில் பலர் கல்விகற்று வருகின்றனர். அதனால் சித்திபெற்ற மாணவர்களின் கொடுப்பனவுகள் மற்றும் அவர்கள் தொடர்பில் பூரண தகவல் பெறவேண்டியுள்ளது.

எனவே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் மாணவர்களை நேரடியாகவோ அல்லது 021 320 8201 என்ற பாடசாலையின் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## கிளி.மத்திய கல்லூரி மாணவன் முதலிடம்

(கிளிநொச்சி)

மாகாண மட்டத்தில் நடைபெறும் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான ஆக்கத் திறன் போட்டியில் வாய்ப்பாடு மனனப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்விபயிலும் தரம் 5 மாணவனான சிவராஜா தேனுஜன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இப்போட்டி நேற்றுமுன்தினம் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்த 100 மீற்றர் மின்சார வயர் மாயம் !

## அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பாளர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையின் மின்சாரப் பகுதியிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 100 மீற்றர் மின்னிணைப்பு வயர் காணாமல் போயுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் கட்டிடம் திருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றின் பயன்பாட்டுக்கென மின்சாரப் பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மின்னிணைப்பு வயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்தே 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 மீற்றர் வயர் களவாடப்பட்டுள்ளன.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு முறையிடப்பட்டதையடுத்து மூன்று நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் பணித்துள்ளார். (ச)

# மண் வளப் பரிசோதனை நிலையத்தை திருநெல்வேலியில் அமைக்க நடவடிக்கை

மண்வளப் பரிசோதனை உறுத்திப்படுத்தல் நிலையமொன்று விரைவில் திருநெல்வேலியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் மண் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான உயர்மட்ட மாநாடு நேற்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

இவ் மாநாட்டில் பராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் ரங்கராஜா, யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன், மன்னார் அரசாங்க அதிபர் நீக்களஸ்பிள்ளை, யாழ்.மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், கமநல சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பற்றிக் ரஞ்சன், கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன் மற்றும் பனை அபிவிருத்திச்சபை பொதுமுகாமையாளர் எம்.பி.லோகநாதன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

இதன்போது மண்வளப் பரிசோதனை செய்யும் அலுவலகத்தை திருநெல்வேலியில் அமைப்பது தொடர்பில் விரைவுபடுத்து எனவும் முடிபெடுக்கப்பட்டதாகவும் அரச அதிபர் கூறியுள்ளார்.

வடமாகாணத்தில் கிளிநொச்சியில் இயங்கிவந்த மண்வளப் பரிசோதனை நிலையம் தற்போது வவுனியாவில் தற்காலிகமாக இயங்கிவருகிறது. இவ் வலுவலகத்தை விரைவில் கிளி நொச்சிக்கு மாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-5)

# ஆற்றாமை கண்டு அழுத தமிழ் அருளாளர்கள்

நாயிற் கடையேனை, என்று தமிழ் அருளாளர்கள் தம்மை தாழ்த்தி இறைவனிடம் வரம் வேண்டுவதை காண்கின்றோம்.

அப்படியானால் நாய்தான் உலகில் இழிபிறப்பென்று கருதுவதற்கு இடமுண்டு. அவ்விதம் நாய் இழிபிறப்பெனக் கருதப்படுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

அதில் ஒன்று, வலிமையான எலும்பைக் கடிக்கும் நாயானது தனது பல்லிலிருந்து சிந்தும் குருதியை எலும்பிலிருந்து சிந்துகின்ற இரத்தம் எனக் கருதி வெறும் எலும்பைக் கடிப்பதும் வேறு இரை தேடாமல் அதையே இரையாக நினைப்பதும் பசிகிடப்பதும்.

இரண்டாவது காரணம் உலக ஜீவராசிகள் அனைத்துக்கும் ஆறுதல் தரக்கூடிய சிற்றின்பம் நாய்களுக்கு மட்டும் பெரும் வேதனையாய் முடிபது.

மூன்றாவது காரணம் தன் இனத்தை தானே கடித்துக் குதறிக் கூத்தாடுவது.

இம் மூன்று இயல்பினால் நாய்ப் பிறப்பு இழிபிறப்பாயிற்று. அந்த இழிபிறப்பிலும் யான் மோசமானவன் எனவே எனக்கு நீ முக்தியின்பம் தா என்று இறைவனிடம் இறைஞ்சும் அருளாளர்களின் நோக்கம் இறைவனின் அனுதாபத்தை பெற்றேனும் பேரின்பப் பெருவாழ்வை பெறுதலாகும்.

இவை சமய தத்துவம். இந்தத் தத்துவத்திற்கு அப்பால் இன்னுமோர் தத்துவம் உண்டு.

அந்தத் தத்துவம் எதுவென ஆராய்ந்தால், நாயன்மார்கள் அத்தனை பேரும் தமிழர்கள். அவர்களே தம்மை நாயிற் கடைப்பட்டவர்களாக வெளிப்படுத்தினர். அந்த வெளிப்படுகை, ஆற்றாமையின் காரணமாக எழுந்தமையாகும்.

ஆற்றாமை எதற்கானது என்பது குறித்தும், தம்மை நாயிற் கடைப்பட்டதாக காட்டிக் கொண்டது எதற்கானது என்பது குறித்தும் ஆராய்ந்தால் நர்ய்களுக்கு இருக்கக் கூடிய மிக மோசமான இயல்பில் ஏதோவொன்று அவர்களை தாக்கியுள்ளது என்ற முடிவுக்கு வர முடியும். அப்படியானால் நாய்களை கடைப்பிறப்பாக்கும் இதன் மூவியல்பில் ‘ஒற்றுமையின்மை’ என்பது மட்டுமே பொருத்துடையதாக அமைகின்றது.

ஆக, நாய்களின் ஒற்றுமையீனம் எப்படி அந்த இனத்தை தாழ்த்தி நிற்கின்றதோ அதே போன்று தமிழினத்தின் ஒற்றுமையீனம் அந்த இனத்தை பலவீனப்படுத்தி படுபாதாளத்தில் தள்ளுகின்றது.

இதனாலேயே தமிழ் அருளாளர்கள் நாயிற் கடைப்பட்ட... என்ற முடிபுக்கு வந்திருக்கலாம். அன்று அவர்கள் எடுத்த முடிபை ஈழத் தமிழர்களாகிய நாம் இன்று நிஜத்தில் அனுபவிக்கின்றோம்.

தமிழ் அரசியல்வாதிகள் முதல் தமிழ் அதிகாரிகள் வரை சீச்சீ...குறையும் குற்றமும்.

செயலில் எதனையும் செய்யும் திராணியில்லா வெறுவிலிகள் கத்திக் கத்தியே தமிழினத்தை மோசம் செய்கின்றன.

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



பலவீனப் பிண்டங்கள் யாரும் இந்தப் பாதையைப் பின்பற்ற முடியாது. "நான் ஆன்மா. நான் சுதந்திரன். நான் கட்டுப்படவே இல்லை. காலம் என்னில் இருக்கிறது. நான் காலத்தில் இல்லை. கடவுள் என் மனதிலிருந்தே தோன்றினார்." இப்படி கூறும் தைரியம் இருக்க வேண்டும்.

மூட நம்பிக்கைக்கு முழந்தாளிடுவதும், உங்கள் மனதிற்கே உங்களை விற்றுவிடுவதுமாகிய இது எனது ஆன்மாவாகிய உங்களுக்குத்தகாது. நீங்கள் எல்லையற்றவர்கள் மரண மற்றவர்கள். பிறப்பற்றவர்கள். நீங்கள் அளவு கடந்த ஆன்மா. ஆதலால் அடிமையாயிருப்பது உங்களுக்குப் பொருந்தாது. எழுந்திருங்கள். விழித்துக் கொள்ளுங்கள். எழுந்து நின்று போர் புரியுங்கள்.

"இறைவன் மனிதனைத் தன் பிரதி பிம்பமாகவே படைத்தான்" என்பது சரியல்ல. மனிதன் இறைவனைத் தன் பிரதி பிம்பமாக படைத்தான் என்பதே சரி.

## அநுராதபுரம்-தாண்டிக்குளம் வரையான புகையிரத சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது

(கொழும்பு)

அனுராதபுரத்திற்கும் தாண்டிக்குளத்திற்கும் இடையிலான புகையிரத போக்குவரத்துச் சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது.

அனுராதபுரத்தில் இருந்து தாண்டிக்குளம் வரையிலான புகையிரத பாதையில் மேற்கொள்ளப்ப்ட்ட அவசர திருத்த வேலைகள் காரணமாக வடக்கு புகையிரத சேவைகள் அனுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளதால் மீண்டும் புகையிரத வேலைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக புகையிரத வணிக அத்தியட்சகர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பயணச்சீட்டுகள் எதுவும் இன்றி புகையிரதங்களில் பயணிப்போரைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கையில் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## முகமூடி நபர்களினால் ரூ.11 இலட்சம் கொள்ளை

அநுராதபுரம் நகரில் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் ரூ.11 இலட்சம் பணம் முகமூடியணிந்த மர்ம கொள்ளைக்காரர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. குறித்த பகுதியில் அமைந்திருக்கும் துணி விற்பனை நிலையமொன்றின் ஊழியர்கள் இருவர் வங்கிக்குப் பணத்தை எடுத்துச் சென்று கொண்டிருக்கும் வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடியணிந்த இரண்டு மர்ம நபர்கள் ஆயுத முனையில் பணத்தைக் கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொழும்பை அண்மித்த பேலியகொடை பகுதியில் நடைபெற்ற ரூ. ஏழு கோடி கொள்ளையில் அமைச்சர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக தகவல்கள் கசிந்து கொண்டிருக்கும் நிலையிலேயே அநுராதபுரக் கொள்ளை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## அரசாங்க காணிகள் அனைத்தையும் அளவையிடுமாறு ஜனாதிபதி பணிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள அரச காணிகள் அனைத்தையும் மீண்டும் அளவையிடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளவையியல் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளார். வடமேல் மாகாண அபிவிருத்திக் குழுக்கூட் டத்தின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத் தலை விடுத்துள்ளார்.

அளவை நடவடிக்கைளுக்காக திணைக்களத்தில் உள்ள அதிகாரிகள் போதுமானதாக அமையாத பட்சத்தில் தனியார் அளவையியலாளர்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அளவை நடவடிக்கைகள் தொடர்பில் துரிதமாக தமக்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்குமாறு அவர் பணித்துள்ளார்.

அரச காணிக்ள் தனியார் தரப்பினரால் கைப்பற்றப்பட்டுள்ளதால் மீண்டும் காணி அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கனடாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானவரென சன்.சீ.பயணிகளில் மேலுமொருவர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

எம். வி.சன். சீ. பயணிகள் 492 பேரில் கனடாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானவராக இரண்டாவது நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பொலிசார் இவர் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தாக உள்ளார் என்று பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

மனைவி சகிதம் இவர் எம்.வி.சன்.சீ. கப்பலில் கனடாவை கடந்த ஓகஸ்ட் மாதம் வந்தடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவர் மீதான விசாரணை நான்காவது தடவை இடம்பெற்றது. இவர் போலிக் கடவுச்சீட்டுக்களில் ஹொங்கொங்குக்கும் இலங்கைக்கும் இடையில் பயணித்து வந்திருக்கின்றார் என்பதை கனேடிய அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

இவர் ஆரம்பத்தில் இக்குற்றச்சாட்டை மறுத்து விட்டார். ஆயினும் இறுதியில் வேறு வழி இல்லாமல் உண்மையை ஒப்புக் கொண்டார் எனவும் இவர் குறித்த சரியான விபரங்கள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை என்று கனேடிய அதிகாரி தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவரைத் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளனர். இதேவேளை புலிகள் அமைப்பினருடன் வெளிநாடுகளுக்கு பயணித்து இருந்தார் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் எம்.வி.சன்.சீ. பயணிகளில் ஒருவர் கனடாவில் பாதுகாப்புக்கு ஆபத்தானவராக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## மட்டக்களப்பில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 ஆயிரத்து704 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, வீதி அமைப்பு, கைத்தொழில், சுற்றுலா ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

## மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்பு பிரிவினர் ஆயுதங்களுடன் வெளிமாவட்டங்களுக்கு செல்ல அனுமதி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு உறுப்பினர்களுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் மாவட்டத்திற்கு வெளியே ஆயுதங்களுடன் செல்லக்கூடாதென விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளமை தொடர்பாக மாகாண முதலமைச்சரும் தவிசாளரும் தமக்கு அறிவித்துள்ளதாக மாகாண சபை உறுப்பினர் இரா. துரை ரெட்ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களின் பாதுகாப்புக் கடமையில் இணைக்கப்பட்டுள்ள பொலிஸார் மாவட்டத்திற்கு வெளியே ஆயதங்களுடன் செல்லமுடியாது என கடந்த வாரம் பொலிஸ் உயர் அதிகாரிகளினால் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபை கூட்டத்திற்கு சில மாகாணசபை உறுப்பினர்கள் ஆயுதங்கள் இல்லாத பொலிஸாருடனேயே சென்று திரும்பியிருந்தனர்.

இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணசிங்கம் தெரிவித்ததாவது, இந்தப் பிரச்சினையை மாகாணசபை உறுப்பினர்கள் சபையில் முன்வதைத்ததை அடுத்து, முதலமைச்சர் மற்றும் சபை முதல்வர் ஆகியோர் கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபரை அழைத்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றும் பொலிஸார் ஆயுதங்களுடன் வெளிமாவட்டங்களிற்கு செல்வது தொடர்பாக விதிக்கப்பட்ட தடையில் மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாக செல்லும் பொலிஸாருக்கு விதிவிலக்கு அளிக்க கிழக்கு பிராந்திய பொலிஸ்மா அதிபர் இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து தங்களுக்கு முதலமைச்சரினாலும் சபை தவிசாளரினாலும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

## அபிவிருத்தி திட்டங்களை குறிக்கும் புதிய வரைபடத்தை வெளியிட தீர்மானம்


(கொழும்பு)


இலங்கையில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைக் குறிக்கும் இலங்கை வரைப்படம் ஒன்றை வரைவதற்கு நில அளவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் பாரிய வீதி கட்டமைப்புக்கள், துறைமுகங்கள், நீர்த் தோக்கங்கள் மற்றும் அரச கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அளவைத் திணைக்கள அதிகாரி மகேஷ் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டடங்கள் மற்றும் நீர்த் தேக்கங்கள் என்பவற்றை ஆகாயத்தில் இருந்து படம் எடுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய வரைப்படம் அடுத்த வ்ருடத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில அபிவிரூத்தித் திட்டங்கள் தொடர்பிலான தகவல்களைப் பெறுவதற்காக செய்மதிப் புகைப்படங்கள் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அளவைத் திணைக்கள அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)






யாழ். வலயக் கல்வி பணிமனையில் நேற்று காலை பாடசாலை படமாக்கலிற்கான செயலமர்வு நடைபெற்ற போது நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன்)

# சதம் அடித்தனர் சச்சின், விஜய்

# பதிலடி கொடுத்தது இந்தியா



(பெங்களூர்)

சச்சின் டெண்டுல்கர், முரளி விஜய் சதமடித்து அசத்த, இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்களையிழந்து 435 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த சனிக்கிழமை பெங்களூரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 478 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 128 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு டெண்டுல்கர்-விஜய் ஜோடிபொறுப்பான இணைப்பாட்டத்தினை வழங்கினர்.

இதில் சச்சின் டெண்டுல்கர் 91 பந்துகளிலும் முரளி விஜய் 105 பந்துகளிலும் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 200 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் களத் தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் சச்சின் டெண்டுல்கர் 157 பந்துகளில் தனது 49-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய முரளி விஜய் 234 பந்துகளில் தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 300 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 308 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய் 310 பந்துகளில் (14 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 139 ஓட்டங்களைப் பெற்று ஜோன்சனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பெய்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அறிமுக வீரர் புஜாரா நான்கு ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஜோன்சனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து வந்த சுரேஸ் ரெய்னா சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 400 ஓட்டங்களைத் தொட்டது. எனினும் சுரேஸ் ரெய்னா 43 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களை எடுத்து மைக்கல் கிளார்க்கின் பந்து வீச்சில் ஹில்பென் ஹயூசிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 411 ஓட்டங்களை எடுத்து 5 -வது விக்கெட்டையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் தோனி பொறுப்பாக துடுப்பெடுத்தாட இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஐந்து விக்கெட்டுக்களையிழந்து 435 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 319 பந்துகளில் (20 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 191 ஓட்டங்களையும் அணித் தலைவர் தோனி 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் மிச்சல் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களையும் ஹல்பென்ஹயூஸ், மைக்கல் கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### தொடரும் சாதனை

❖ பெங்களூர் டெஸ்டில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் சாதனை தொடர்கிறது. நேற்று முன்தினம் டெஸ்ட் அரங்கில் 14 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய முதல் வீரர் என்ற உலக சாதனை படைத்தார்.

❖ நேற்று டெஸ்ட் அரங்கில் 49-வது சதம் விளாசிய சச்சின் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கின்றார். டெஸ்டில் அதிக சதம் கடந்த முதல் ஐந்து வீரர்கள் சச்சின்(இந்தியா) 171 போட்டிகளில் 49 சதங்கள். பொன்டிங் (ஆஸி.) 148 போட்டிகளில் 39 சதங்கள்.

கலிஸ் (தென்னாபிரிக்கா) 140 போட்டிகளில் 35 சதங்கள். கவாஸ்கர் (இந்தியா) 125 போட்டிகளில் 34 சதங்கள். லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) 131 போட்டிகளில் 34 சதங்கள்.

❖ இதுவரை டெஸ்ட் அரங்கில் 49, ஒரு நாள் அரங்கில் 46 சதங்கள் விளாசிய சச்சின் சர்வதேச அரங்கில் மொத்தம் 95 சதங்கள் விளாசியுள்ளார். இன்னும் 5 சதங்கள் அடிக்கும் பட்சத்தில் 100சதங்களை எட்டலாம்.

❖ நேற்று 116 ஓட்டங்களை எடுத்தபோது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் 3 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த 3-வது வீரர் என்ற சாதனை படைத்தார் சச்சின். இதற்கு முன் இங்கிலாந்தின் ஹாப்ஸ் (3636 ஓட்டங்கள்), டேவிட் கோவர் (3269 ஓட்டங்கள்) ஆகியோர் இந்த இலக்கை எட்டியுள்ளனர்.



❖ அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று 11-வது சதம் (31 போட்டி) அடித்தார் சச்சின். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் கடந்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடம் பிடித்தார். இப் பட்டியலின் முதலிடத்தில் இங்கிலாந்தின் ஹாப்ஸ் (12 சதம், 41 போட்டி) உள்ளார்.

❖ நேற்று 191 ஓட்டங்கள் சேர்த்த சச்சின் டெஸ்ட் அரங்கில் 20-வது முறையாக 150 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் முன்னாள் வீரர் பிரைன் லாராவை முந்தி புதிய சாதனை படைத்தார். லாரா 19 முறை 150 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

❖ சொந்த மண்ணில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் அடித்த வீரரானார் சச்சின். இவர் இந்தியாவில் 22 சதங்கள் விளாசியுள்ளார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் பொன்டிங், ஹைடன் சாதனையை முறியடித்தார்.

இவர்கள் இருவரும் அவுஸ்திரேலிய மண்ணில் 21 சதங்கள் அடித்துள்ளனர்.

❖ ஒரே ஆண்டில் அதிக சதங்கள் (6) அடித்துள்ள முதல் இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார் சச்சின். நேற்று சச்சின், முரளி விஜய் ஜோடி 308 ஓட்டங்கள் எடுத்து அசத்தியது.

இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 3-வது விக்கெட்டுக்கு அதிக பட்ச ஓட்டங்களைக் குவித்த இரண்டாவது ஜோடி என்ற பெருமை பெற்றது.

இப் பட்டியலின் முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் கிரீம் போலக், பார்லோவ் ஜோடி உள்ளது. இந்த ஜோடி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மூன்றவாது விக்கெட்டுக்கு 341 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

### இரண்டு ஆண்டுகளுக்குப் பின்

டெஸ்ட் அரங்கில் முதல் சதம் அடித்து அசத்தினார் இந்திய வீரர் முரளி விஜய். காம்பீருக்கு பதில் அணியில் வாய்ப்புப் பெற்ற இவர் சாதித்துக் காட்டியுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நாக்பூரில் நடந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அறிமுகமானார் முரளி விஜய். அணியில் அவ்வவப்போது வாய்ப்புப் பெற்று வந்த இவர் சதம் அடிக்கவில்லை. ஆனால் இவரது சதம் அடிக்கும் கனவு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியது.

இதுவரை 8 டெஸ்டில் விளையாடியுள்ள இவர் 2 அரைச் சதம், ஒரு சதம் உட்பட 472 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

# சுழலில் சிக்கியது நியூசிலாந்து பங்களாதேஷ் தொடரில் முன்னிலை

(மிர்பூர்)

சுழல் சுறாவளி கைகொடுக்க பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி ஒரு நாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றுத் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற 2-வது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

இந் நிலையில் மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 42.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 173 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோஸ் ரெய்லர் 72 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 62 ஓட்டங்களையும் ரைடர் 33, மில்ஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சுழற்பந்து வீச்சாளர் சுராவடி சுவோ 3 விக்கெட்டுக்களையும் சகிப் அல் ஹசன், மகமடுல்லா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 40 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 177 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் சகாகியர் நபீஸ் 73 பந்துகளில் (13 பவுண்டரிகள் உட்பட) 73 ஓட்டங்களையும் இம்ரூஸ் ஹயிஸ் 50 ஓட்டங்களையும்எடுத்தனர்.

பந்து வீச்சில் நதன் மக்குலம் 2 விக்கெட்டுக்களையும் மைக்கேய் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொட ரில் பங்களாதேஷ் அணி 2:0 என்ற கணக் கில் முன்னிலையில் உள்ளது.



இராணுவ தினத்தை முன்னிட்டு வயாவிளான் மத்திய மகா வித்தியாலய சூழலைத் துப்பரவு செய்யும் படையினர்.

# அரச சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகள் அதிகம்!

## அனுமதி வழங்கலில் சிக்கல் என்கிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

அரசசார்பற்ற நிறுவனங்களினால் சமர்பிக்கப்படும் செயற்திட்டங்களில் நிர்வாகச் செலவு அதிகப்படுத்தப்பட்டுக் காணப்படுவதனாலேயே அனுமதி வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுவதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறு வனங்களுடனான கலந்துரையாடலின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனான விஷேட கலந்துரையாடல் நேற்று யாழ். செயலகத்தில் வடமாகாண ஆளுனரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

இதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்கள் தொடர்பில் விளக்கப்பட்டது. அரசசார்பற்ற நிறுவனங்களினால் முன்வைக் கப்படும் செயற்திட்டங்களில் நிர்வாகச் செலவு 40 வீதமாகவும் செயற்திட்டச் செலவு 60 வீதமாகவும் உள்ளது. ஆனால் நிர்வாகச் செலவு 2 வீதத்தில் இருக்க வேண்டும்.

எனவே தான் அதிகரிக்கப்பட்டுக் காணப்படும் நிர்வாகச் செலவினாலேயே அரசசார்பற்ற நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் செயற்திட்டங் களினை அனுமதிப்பதில் தாமதமாகின்றது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள எந்தஒரு உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமோ ஜனாதிபதி செயலணியின் அனுமதியினைப் பெற வேண்டும்.

இதன்போது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டம், தற்காலிக வீடமைத்து வழங்கல், நீர் வழங்கல், மலசல கூட வசதிகள் செய்து கொடுத்தல் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை மேம்படுத்தல் போன்ற பணிகளுக்கு ஜனாதிபதி செயலணி உடனடியாக அனுமதி வழங்கப்படும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ச-5)

# மீன் பிடித்தலுக்காக...

களிலும் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனராட்விற்கும் பாதுகாப்புச் செயல்ாளர் கோதபாய ராஜபக்ஷவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாடு முழுவதிலும் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை தொடர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி வள அமைச்சுக்குத் சொந்தமான 40 எச்.பி. என்ஜின்களை கொண்ட 141 மீன்பிடி வள்ளங்களை பாதுகாப்பு அமைச்சு தடுத்து வைத்துள்ளதாகவும் இவற்றை மீளவும் மீன்பிடி அமைச்சுக்கு வழங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 எச்.பி.ரக என்ஜின்களை உடைய வள்ளங்களை மீன்பிடி நடவடிக்கைளுக்கு பயன்படுத்தக் கூடாது என்ற தடையும் நீக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த அறிவிப்பு வடக்கு கிழக்கு வாழ் மீனவர்களுக்கும் பொருந்துமா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என வடக்கு கிழக்கு மீனவர்கள் பலர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# 'சிறையில் மரணமடைய...

எவர் முன்னிலையிலும் மண்டியிட்டு மன்னிப்புக்.கோர மாட்டேன் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியளார்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் உயிரிழக்க நேரிட்டாலும் ஆயுள் முழுவதும் சிறைத்தண்டனை அனு பவித்தாலும் அடக்கு முறைகளுக்கு அடி பணியும் உத்தேசம் கிடையாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு விசாரணைகளுக்காக ஆஜராகியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் வெள்ளைக்கொடியேந்தி சரணடைய வந்த புலி உறுப்பினர்களை படு கொலை செய்யுமாறு உத்தரவிட்டதாக ஊடகவியலாளர் ஒருவரின் மூலம் தாம் அறிந்து கொண்டுள்ளதாக சரத் பொன்சேகா தெரிவித்தார் என சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் நேற்றைய தினம் சாட்சியமளித்துள்ளார். (ச-5)

# வயாவிளான் ம.வியின் கல்...

மேற்பட்ட மாணவர்கள் நேற்று தமது கல்விச் செயற்பாடுகளை மேற் கொண்டனர்.

இதே வேளை பாடசாலையின் புனரமைப்புக்கென வடக்கின் மீளெழிச்சித் திட்டத்தின் கீழ் 6.1 மில்லியன் ரூபாய் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலை கட்டிடங்களின் கூரைகள் மற்றும் புனரமைப்பு வேலைகளை இந்நிதியினைக் கொண்டு எதிர்வரும் 2 மாதங்களுக்குள் நிறைவு செய்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் புனரமைப்புக்கென வடமாகாண ஆளுநர் 2 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வயாவிளான்மத்திய மகா வித்தியாலயத்துக்கு செல்லும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வகையில் பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதெனவும் அதற்கென இராணுவக் காவலரண்களை பின் நகர்த்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவ தால் இராணுவத்தினர் தண்ணீர்வழங்குவதற் கும் இணக்கம் தெரிவித்துள்ளனர். (ச-5)


SAKTHIMICRO SYSTEM
Sankaththanai, Chavakachcheri, 0776102609
புதுப் பொலிவுடன்........ புதிய பிரிவுகள் ஆரம்பம்.......
Diploma in ICT, Advanced Maya, Video Editing, Office MultiMedia, Internet, Hardware. அதி நவீன கணனி லாப்
அதிரடி மலிவு விற்பனை
for game use

Processor - Dual Core - 2.7Ghz
Motherboard - Core 2 Support.
RAM - 1GB
VGA - 128Share
HardDisk - 320GB
DVD Writer
Monitor - 40cm LCD
Multi Media Keyboard
Optical Mouse
3Years Warranty
~~48,000 /=~~ 43,850 /=
HI SPEED INTERNET CAFE

| | |
|---|---|
| Intel Dual Core 2.7Ghz | 8100/= |
| Biostar G31 | 5500/= |
| DVD Writer | 3100/= |
| 1GB DDR2 RAM | 3000/= |
| Hard Disk 320GB | 5400/= |
| Hard Disk 500GB | 5800/= |
| Keyboard,Speaker | 450/= |
| Optical Mouse | 275/= |
| Headset (with mic) | 350/= |
| Web camera 3 MP | 1100/= |
| UPS (2Y) | 4250/= |
| VGA Card ATI 512MB | 5800/= |
| M card reader | 350/= |
| Flash 4GB (5Y) | 1400/= |
| Flash 2GB | 1200/= |
| Router | 3800/= |

சக்திமைக்றோ சிஸ்ரம்
www.sakthizone.com, info@sakthizone.com, 0756142526


# யுவதியும் சிறுமியும் நேற்று வீட்டுக்குத் திரும்பாததால் பதற்றம்

(திருநெல்வேலி)

துன்னாலைப் பகுதியிலிருந்து செம்பியன்பற்றுக்குச் சென்ற யுவதி ஒருவரும், சிறுமி ஒருவரும் வீட்டுக்குத் திரும்பாததால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

செம்பியன் பற்றைச் சேர்ந்த செபஸ்தியான் பிள்ளை ஜெனிற்றா (வயது-10), எஸ்.ஜீவா (வயது-19) ஆகிய இருவருமே வீட்டுக்குத் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

துன்னாலையிலுள்ள சகோதரியின் வீட்டுக்கு வந்த இவர்கள் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு செம்பியன்பற்றுக்கு புறப்பட்டுச் சென்றனர். அதன்பின்னரே அவர்களை காணவில்லை எனக் கூறப்படுகிறது. இவர்களை இறுதியாக புதுக்காட்டப் பகுதியில் கண்டதாக உறவினர்கள் கூறியுள்ளனர். (ச-49)

# 10 ஆயிரம்...

கொண்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கறுப்பு நிற ஆடைகளை அணிந்திருந்தனர். இதேவேளை இவ்வார்ப்பாட்டப் பேரணி நடைபெற்ற இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (ச-5)

# சண்டே லீடர் ஆசிரியர்...

பொன்சேகாவிடமிருந்து பெற்றுக்கொண்டதாக அவர் சாட்சியமளித்தார்.

சரத் பொன்சேகாவினால் வழங்கப்பட்ட விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு டிசம்பர் 20ஆம் திகதியன்று அந்த செய்தியை பிரசுரித்ததாகவும் ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர, ஜே.வி.பியின், அனுரகுமார திஸ்ஸநாயக்க ஆகியோர் தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயன்றதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து வெள்ளைக்கொடி தொடர்பாக மறுப்புத் தெரிவித்து கடிதம் ஒன்றை பிரதிவாதி தனக்கு அனுப்பியதுடன் அதனை பிரசுரிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந் தார்.

சரத் பொன்சேகா இந்த விடயம் தொடர்பான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் அவரது மறுப்பு அறிக்கை பிரசுரிக்கப்படவில்லை என ஜேன்ஸ் குறிப்பிட்டார்.

எனினும் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதியன்று ஹேர் ஸ்டோரி என்ற தலைப்பிலான செய்தி அறிக்கையில் நடந்த விடயங்களை தாம் பிரசுரித்ததாகவும் சண்டே லீடர் ஆசிரியரான ப்ரெட்ரிக்கா ஜேன்ஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் சரத் பொன்சேகா சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி நளின் லந்துவாஹெட்டி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணையின் போது பிழையான செய்தியை வெளியிட்டது தொடர்பாக பல நீதிமன்ற விசாரணைகள் உங்களுக்கு எதிராகவுள்ளதா? என்ற சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி சாட்சியிடம் வினவினார். இதற்கு பதிலளித்த சாட்சியான ஜேன்ஸ் அதனை ஏற்றுக்கொண்டார்.

பாதுகாப்புச் செயலாளருக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய செய்திகளை வெளியிடுவதில்லையென தங்களால் ஏற்கனவே உறுதி வழங்கப்பட்டுள்ளது.

அது எந்த நிலையிலாவது மீறப்பட்டுள்ளதா? அப்படியான கட்டுரை ஏதாவது பிரசுரிக்கப்பட்டதா? என சாட்சியிடம் சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி லதுவாஹெட்டி வினவிய போது அதனையும் சாட்சி ஏற்றுக்கொண்டார். இந் நிலையில் விசாரணை இன்றும் தொடரவுள்ளது. (ச-3,5)


மாபெரும் மலிவு விற்பனை யாழ்ப்பாணத்தில்...

AHIEZER SUPPLIERS
எகி(H)சர் சப்ளையர்ஸின் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள புதிய காட்சி அறையில் (பல வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக)இன்னும் ஒரு படி மேலே சென்று பல பொருட்கள் உங்களுக்காக விசேட விலைக் கழிவுடன் .....!

- Tiles விற்பனையில் புதிய புரட்சி ... India, Australia Tiles Company ஆன H & R Johnson (Super cut) Tiles நேரடி இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.(www.hrjindia.Com) (சர்வதேச தரநியமம் ISO மற்றும் இலங்கை தர நியமம் SLS தரச்சான்று பெற்றது)
- உங்கள் குளியலறை புதிய பொலிவு பெற India,Malaysia விலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Commode, Squatting Pan, Bathroom Fittings.
- மிகக் குறைந்த விலையில் S - LON PE+ நீர்த்தாங்கிகள்
- 2 வருட உத்தரவாதத்துடன் Venus, Bajaj Ceiling Fans.
- Electrical Wires (வயர்) & Electrical Accessories (உதிரிகள்), New Design show Lamps.
- ISO,SLS தரம் வாய்ந்த PVC Pipes, Conduit Pipes & Fittings.
- Large Diameters PVC Pipes and Fitting available



★ தரமாகவும் மலிவாகவும் நீங்கள் ஏமாற்றமடையாமல் கொள்வனவு செய்ய வேண்டுமானால் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

25000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு வாகன சேவை இலவசம்...!

[Building Department, Contractors,NGO'S, Water Board, Plumbers & Electricians] ஆகியவற்றுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

AHIEZER SUPPLIERS
No .289, Brown Road,Kaladdi Junction,Jaffna.
021 5100 700
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும்,தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அருகில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.